Registered as a News Paper பக்கங்கள் 12 விலை: ரூ. 6/-

# ஈழநாதம்

வெள்ளி மஞ்சரி

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர் கிளை நூலகம்.

நாதம் 5 திருவள்ளுவர் ஆண்டு 2025 ஆவணி 31 16-09-94 வெள்ளிக்கிழமை ஓசை 210

## பரீட்சைகளின் எண்ணிக்கை குறைக்கத் திட்டம்

இலங்கையில் வருடாந்தம் நடைபெறும் பரீட்சைகளின் எண்ணிக்கையை குறைக்க அரசு ஆலோசித்து வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. வருடாந்தம் 250 பரீட்சைகள் நடத்தப்படுகின்றன. இவற்றில் சில பரீட்சைகள் அனாவசியமானவை. மாணவர்களுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் பரீட்சைப் பாடத்திட்டங்களில் மாற்றம் ஏற்படுத்தப்படும் என கல்வி, உயர்கல்வி அமைச்சர் ரிச்சார்ட் பத்திரான தெரிவித்துள்ளார்.

# அரசின் சமாதான முயற்சிகள்; படையினர் நம்பிக்கையீனம்

## நிலைப்பாட்டை விளக்க அமைச்சர் மீண்டும் முகாம்களுக்கு விஜயம்

(கொழும்பு)

சந்திரிகா அரசின் சமாதான நடவடிக்கைகள் குறித்து இராணுவத்தினர் மத்தியில் விளக்கமளிக்கப்பட்ட போதிலும், இது தொடர்பாக அவர்கள் மத்தியில் நம்பிக்கையீனம் தொடர்ந்து நிலவுவதாக பி. பி. ஸி. சிங்கள சேவையின் கொழும்புச் செய்தியாளர் எல்மோ. பர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் கேணல் அனுருத்த ரத்வத்தவின் வடபகுதி இராணுவ முகாம்களுக்கான விஜயம் குறித்து அவர் கருத்துத் தெரிவிக்கும்போது இவ்வாறு கூறினார்.

கேணல் அனுருத்த ரத்வத்த நேற்று வடபகுதியின் முக்கிய இராணுவ முகாம்களுக்கு விஜயம் செய்திருந்ததாகவும் இவருடன் பத்திரிகையாளரில் சிலரும் சென்றதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

வவுனியா, மணலாறு, மன்னார் இராணுவ முகாம்களுக்குச் சென்ற பிரதியமைச்சர் கேணல் அனுருத்த ரத்வத்த தற்போது நடைபெற உத்தேசிக்கப்பட்டுள்ள பேச்சு வார்த்தைகள் தொடர்பாக இராணுவத்தினர் மத்தியில் விளக்கியதுடன் அவர்களின் கருத்துக்களை கேட்டறிந்து கொண்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

(12ஆம் பக்கம் பார்க்க)

## சூரியகந்த புதைகுழியில் மேலும் 300 சடலங்கள்?

[கொழும்பு]

சூரியகந்த புதைகுழியில் மேலும் 300 சடலங்கள் வரை காணப்படலாமென அங்கிருந்து கிடைத்த செய்திகள் தெரிவிக்கின்றன. இதனால் அப்பகுதிக்கு அநாவசியமாக எவரும் செல்ல அனுமதிக்கப்படவில்லை.

இதேவேளை மீண்டும் புதைகுழிகள் அகழும் வேலை ஆரம்பித்ததிலிருந்து ஏழு எலும்புக் கூடுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. சூரியகந்த பகுதியில் கூடுதலான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பதாக பொலிசார் தெரிவித்துள்ளனர்.

## பிரதி அமைச்சர் வீரவன்னி கொலை தொடர்பாக கைது

(கொழும்பு)

பிரதி அமைச்சர் சமரவீர வீரவன்னியை செப்டெம்பர் 28-ம் திகதி வரை விளக்கமறியலில் வைப்பதற்கு நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

நடைபெற்ற பொதுத் தேர்தலின்போது பதுளை மாவட்டத்தில் பொதுஜன ஐக்கிய முன்னணி சார்பில் போட்டியிட்ட இவர் தேர்தல் காலங்களில் எதிர்க்கட்சி உறுப்பினர் விக்கிரமரத்தினவை துப்பாக்கியால் சுட்டு கொலை செய்தது தொடர்பாக இவர் கைதுசெய்யப்பட்டார்.

(12ஆம் பக்கம் பார்க்க)

## பேச்சுக்களில் சர்வதேச மத்தியஸ்தம் இல்லை

### பிரதி பாதுகாப்பு அமைச்சர் தெரிவிப்பு

[கொழும்பு]

நாட்டில் அமைதியை ஏற்படுத்துவது தொடர்பான எந்த நடவடிக்கையும் மக்களின் கவனத்துக்கு கொண்டுவரப்படும் சமாதான முயற்சிகளில் மத்தியஸ்தம் வகிக்க செஞ்சிலுவைச் சங்கம் போன்ற சர்வதேச ஸ்தாபனங்களை அரசு ஒருபோதும் பயன்படுத்தாது என பிரதி பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்த தெரிவித்துள்ளார்.

வவுனியா, மன்னார் பகுதிகளிலுள்ள முன்னணி இரா

(12ஆம் பக்கம் பார்க்க)

## ஏறாவூர் பிரதேச சபை தலைவர் சுட்டுக்கொலை

(மட்டக்களப்பு)

ஏறாவூர் பிரதேச சபைத் தலைவர் கடந்த செவ்வாய் காலையன்று அவரது காரியாலயத்தில் வைத்து இனந்தெரியாத இளைஞர் ஒருவரால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

திலகரத்தினம் ஜெயராமன் (வயது 30) என்ற பிரதேச சபைத் தலைவரே கொல்லப்பட்டவராவார்.

இவரது உடலில் ஐந்து சூட்டுக் காயங்கள் இருந்தன. ரெலோ அமைப்பின் உப தலைவர்களில் ஒருவரான இவர், கடந்த பாராளுமன்ற பொதுத் தேர்தலில் தமிழ் தேசிய ஒற்றுமை முன்னணி சார்பில் போட்டியிட்டவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## பெண்பிள்ளைகளுடன் சேஷ்டை செய்பவர் மீது நடவடிக்கை

### காவல் துறையினர் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

விஷமத்தனமான முறையில் பெண்பிள்ளைகளுடன் பகிடிகள், சேஷ்டைகள் விடுபவர்கள் மீது காவல்துறையினர் ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பர் என தமிழீழ காவல் துறையினர் அறிவித்துள்ளனர்.

இது குறித்து தமிழீழ காவல்துறைப் பொறுப்பாளர் பா. நடேசன் விடுத்துள்ள செய்தி ஒன்றில்,

போராட்ட சூழ்நிலையில் எமது மக்கள் அளப்பரிய சாதனைகளை படைத்து வருகின்றனர். வரலாற்றில் முன் எப்போதும் இல்லாத முறையில் பிரச்சினைகளையும், நெருக்கடிகளையும் முறியடித்து புதிய வரலாறொன்றை படைக்கும் அற்புதமான பணி

(12ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பு நகரப் பகுதியில் இனவாதச் சுவரொட்டிகள்

(வடமராட்சி)

சமாதானத்திற்கு குந்தகம் விளைவிக்கக்கூடிய வகையில் கொழும்பு நகரப் பகுதியில் இனவாதச் சுவரொட்டிகள் பரவலாக காணப்படுவதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இச்சுவரொட்டிகளில் தமிழனுக்கு நாடு கொடுக்கிறாய் முஸ்லிமுக்கு துறைமுகம் கொடுக்கிறாய், சிங்களவருக்கு பாணும் பருப்பும் தான்

(12ஆம் பக்கம் பார்க்க)

## கப்பல் கட்டணத்தை நீக்க புதிய அரசிடம் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

குடாநாட்டு மக்கள் மேல் சுமத்தியுள்ள அத்தியாவசியப் பொருட்களிற்கான கப்பல் கட்டணத்தை நீக்குமாறு யாழ். செயலக புனர்வாழ்வு பகுதி புதிய சிறிலங்கா அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

குடாநாட்டு மக்கள்மீது சிறிலங்கா அரசினால் திணிக்கப்பட்டிருக்கும் இந்த கப்பல் கட்டணத்தை நீக்கி குடாநாட்டு மக்களின் பொருளாதார சுமையைக் குறைக்க ஆவனசெய்யுமாறு கோரப்பட்டுள்ளது.

அத்தியாவசிய சேவைகள் ஆணையாளரால் யாழ். குடா

(12ஆம் பக்கம் பார்க்க)

## தியாகி திலீபன் உருவப்படத்திற்கு மக்கள் மலர்தூவி அஞ்சலி

(யாழ்ப்பாணம்)

சாகும்வரை உண்ணாநோன்பிருந்து உயிர் நீத்த லெப். கேணல் திலீபனின் ஏழாம் ஆண்டு நினைவு நாட்கள் நேற்று தமிழீழமெங்கும் எழுச்சி பூர்வமாக ஆரம்பிக்கப்பட்டது.

யாழ். குடாநாட்டின் சகல பகுதிகளிலும் திலீபனின் நினைவுநாள் நிகழ்வுகள் பெரியளவில் ஆரம்பமானது.

வீதிகள், பாடசாலைகள், பொது இடங்கள் மற்றும் காரியாலயங்கள் யாவற்றிலும் வர்ணக் கொடிகள் கட்டப்பட்டு, பந்தல்கள் அமைக்கப்பட்ட இடங்களில் திலீபனின் உருவப்படங்கள் வைக்கப்பட்டிருந்தன.

இவ்வாறுவைக்கப்பட்டுள்ள திலீபனின் உருவப்படங்களுக்கு மக்கள் மலர் சொரிந்து, குத்துவிளக்கு ஏற்றி திலீபனின் நினைவுநாள் உணர்வு பூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது.

சந்திகள், மற்றும் பொது இடங்களில் நேற்றுவிடுதலைப் பாடல்கள் ஒலிபரப்புச் செய்யப்பட்டன.

வலிகாமம், தென்மராட்சி, வடமராட்சி பகுதிகளில் கோட்ட மட்டத்திலும் வட்டப்பிரிவுகளிலும் உண்ணா

(12ஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

**மிருதங்க வகுப்பு**

மிருதங்க வகுப்பு ஆரம்பம் முதல் ஆசிரியர் வகுப்பு வரை நடைபெறுகிறது. விரும்புவோர் தொடர்புகொள்ளவும் கோவிந்தபிள்ளை விஜயகுமார், 192/1 நாவலர் வீதி பெருமாள் கோவிலடி, யாழ்ப்பாணம். (9377)

**றெனி மூக்குக் கண்ணாடி அகம்**

உங்கள் கண்களை சரியாக பரிசோதித்து. உடன் கண்ணாடி வழங்கப்படும் இல, 288, நாவலர் வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம் (9398)

**தவறிவிட்டது**

9-9-94 வெள்ளிக்கிழமை அன்று நல்லூர்க் கந்தசுவாமி கோயில் வாசல் முன்புறமாக பேப்பர் பையுடன் ஒரு மூக்குக்கண்ணாடியும், முக்கியமான மூன்று குறிப்புப் புத்தகங்களும் தவறிவிட்டன கண்டெடுத்தவர்கள் தயவு செய்து ஈழநாதம் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (9410)

**''மரமுந்திரிகை மரம் (கஜு) இனாம்''**

வல்லிபுரக்கோவில் தேர்த் திருவிழாவில் ரூபா 50/-க்கு மில்க்வைற் சவர்க்காரம் வாங்கும் அன்பர்களுக்கு மரமுந்திரிகை மரமும், ''ஹரிஓம்'' வர்ணத்தாளும் இனாமாக வழங்கப்படும். மேலுறைகளுக்கான பரிசுகளையும் பெற்றுக் கொள்ளலாம்.

''மில்க்வைற்'' (சி-10344)

**புதிய மீரா பிரசுரம் ''ஒரு பிடி மண்''**

நாளைய சந்ததிக்காக... இன்றைய இலக்கியம் கே. ஆர்.டேவிட் எழுதிய இம் மண்ணின் கதைகள் மலையில் இருந்து ஒலிக்கும் மணியோசையாய் உங்களை உசுப்பும் ... இவ்வாரம் வெளிவருகின்றது. (9396)

**ஆனந்தம் சீயாக்காய்**

சிரசின் தனித்துவத்தை பேணுவதற்கு வேண்டிய மூலிகைகளுடன் சீயாக்காய் சேர்த்து சித்த மருத்துவ நிபுணர் ஆலோசனைப்படி தயாரிக்கப்பெற்றது ஆனந்தம் சீயாக்காய்ப் பவுடர் பேன், சொடுகு, அழுக்கு முற்றாக அகற்றி சுகவாழ்வு தருகிறது. கேட்டு வாங்குங்கள் ஆனந்தம் சீயாக்காய்ப் பவுடர் [சி:10288]

**தவறிவிட்டது**

4-9-94 அன்று ஆனைப்பந்தி சந்திக்கும் அரியாலை நாவலடிக்கும் இடையில் 2 சாறி, 2 பஞ்சாபி, 1 வேட்டி 1சேட் அடங்கிய சாம்பல்நிற பை ஒன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் ஈழநாதம் காரியாலயத்தில் ஒப்படைக்கவும் சன்மானம் வழங்கப்படும். (9415)

**1995 இல் பெண் தலைவிகளின் ஆட்சி**

(மகரராசி) சந்திரிகா ஜனாதிபதியாகவும், (சிங்கராசி) ஜெயலலிதா தமிழக முதல்வராகவும், 5 வருடங்களுக்கு மேல் தொடர்வார்கள். பெனாசிர் பூட்டோ பாகிஸ்தானிலும், பேகம்காலிதா பங்களாதேசிலும் பிரதமர்களாக 1 வருடம் வரையே தொடர்வார்கள்.

(சத்யா- கட்டுடை] (9413)


# நினைவு கூருகின்றோம்...

## 16-09-1994

1985-ம் ஆண்டு இதேதினத்தில் மட்டு-செங்கலடிப் பகுதியில் காவற்கடமையில் ஈடுபட்டுக்கொண்டிருந்தசமயம் சிறிலங்கா அதிரடிப்படையினரின் சுற்றிவளைப்பில் ஏற்பட்ட சமரில் வீரச்சாவெய்திய,

**மைக்கல்** (நல்லையா பாரதிதாசன்-ஏறாவூர்-மட்டு)

**சதீஸ்** (காமாட்சி சுந்தரம் சதீஸ்குமார்-மட்டு)

திருமலை-நிலாவெளிப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட முற்றுகையின் போது ஏற்பட்ட சமரில் வீரச்சாவெய்திய,

**லெப். சங்கிலி** (மாரிமுத்து மகேந்திரராசா-சிவன் கோயிலடி-திருமலை)

**சரவணன்** (சோமசுந்தரலிங்கம் அருட்குமார்-திருமலை)

**யோகன்** (தம்பிராசா சந்திரமோகன்-சாம்பல்தீவு-திருமலை)

**கோணேஷ்** (கந்தையா சிவனருள்-சணல்ஒழுங்கை-திருமலை)

இதேமுற்றுகையின்போது சுட்டுக்கொல்லப்பட்ட நாட்டுப்பற்றாளரான,

**கந்தசாமி** ( - - நிலாவெளி-திருமலை)

1986-ம் ஆண்டு மட்டு-காஞ்சிரங்குடாப் பகுதியில் சிறிலங்கா சிறப்பு அதிரடிப்படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

**2-ம் லெப். கனெக்ஸ்** (ஞானமுத்து பேணாட் வேலன்-கல்முனை-அம்பாறை)

**ராஜகுமார்** (நல்லதம்பி சந்திரதாஸ்-கல்முனை, அம்பாறை)

**நீலன்** (மயில்வாகனம் சிவகுமார்-தம்பிலுவில்-அம்பாறை)

1987-ம் ஆண்டு வவுனியா - வேப்பங்குளம் பகுதியில் தேசவிரோதசக்திகளுடனான சமரில் வீரச்சாவெய்திய,

**யோகன்** (சுப்பிரமணியம் தயாநிதி-பாரதிபுரம் -வவுனியா)

1989-ம் ஆண்டு கள்ளிக்காட்டுப் பகுதியில் இந்தியப்படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

**கணேஷ்** (கு சந்திரமோகன்-கருநாட்டுக்கேணி-மணலாறு)

1990-ம் ஆண்டு யாழ்-கோட்டைப்பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடிச் சமரில் வீரச்சாவெய்திய,

**2-ம் லெப். நிமலன்-கிட்டு** (பாலசிங்கம் ஜெயவதனன்-தும்பளை, பருத்தித்துறை-யாழ்)

இதே பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய,

**சுபாசினி** (சரஸ்வதி சின்னக்கண்டு-இமையாணன் மேற்கு, உடுப்பிட்டி-யாழ்)

மன்னார்-விடத்தல்தீவுப் பகுதியில் சிறிலங்கா விமானப்படையினர் மேற்கொண்ட உலங்குவானூர்தித் தாக்குதலில் வீரச்சாவெய்திய,

**கப்டன் ஜெயா** (சந்தியோகு பெரேரா தேவசகாயம் பெரேரா-உயிலங்குளம் -மன்னார்)

1991ஆம் ஆண்டு மணலாற்றில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடிச்சமரில் வீரச்சாவெய்திய.

**கப்டன் சங்கிலி** (கதிரமலை அமரசிங்கம் - கொக்கட்டிச்சோலை-மட்டு)

**கப்டன் வில்மட்** (கணபதிப்பிள்ளை எதிர்மன்னசிங்கம் - களுவாஞ்சிக்குடி - மட்டு)

**2-ம் லெப். பிரியன்** (சின்னத்தம்பி யோகராசா-கொக்கட்டிச்சோலை - மட்டு)

**தோத்திரன்** (கந்தப்பு மணியன் - 2-ம் குறிச்சி, பழுகாமம் - மட்டு)

**சுரேன்** (இராசரட்ணம் நவநீதன் -துறைநீலாவணை-மட்டு)

**குலேஸ்** (வைரமுத்து இளங்கோ - வெள்ளையடிமடு, வாகரை- மட்டு)

**லெப். கிறிஸ்ரி** (பாக்கியதுரை தங்கராசா - 1-ம் வட்டாரம், குச்சவெளி - திருமலை)

**2-ம் லெப். குட்டி** (தங்கராசா கிருஷ்ணதாஸ்-உப்புவெளி - திருமலை)

**வண்ணன்** (சிவஞானசுந்தரம் ஜீவா - 2-ம் வட்டாரம், வீரச்சோலை - திருமலை)

**வாணன்** (ஆறுமுகம் கணேசமூர்த்தி - மூதூர் - திருமலை)

**லெப். சிரான்** (விசுவலிங்கம் சிவனேசன் - நெடுங்கேணி - மணலாறு)

**2-ம் லெப். ரவிராஜ்** (மல்லாசன் சுந்தரமோகன் - நெடுங்கேணி- மணலாறு)

**காவியநாயகன்** [மணியம் சிவஞானம் - கொக்குத்தொடுவாய் - மணலாறு]

**எட்வின்** (சின்னையா பிரபாகரன் - அலம்பில்-மணலாறு]

**லெப். சுந்தரர்** (நல்லையா கோவிந்தராசா - செல்வபுரம் - முல்லைத்தீவு)

**துலாஞ்சலி** [சித்திராதேவி சோமசுந்தரம்- ஒட்டிசுட்டான்- முல்லைத்தீவு)

**2-ம் லெப். நடராஜ்** (பிறேமதாஸா பிறேமரட்ணம் -பம்பைமடு- வவுனியா)

**சாயகுமார் புலவன்** (வடிவேலு சுந்தரகுமார்-மகாரம்பைக்குளம்-வவுனியா)

**காந்தி** (மாரிமுத்து சதாசிவம் ரவிச்சந்திரன்-மன்னார் வீதி-வவுனியா)

**கப்டன் கஸ்ரோ** (இராமசாமி குமார்-இரத்தினபுரம்-கிளிநொச்சி)

**கப்டன் பகிரதன்** (கிருஸ்ணபிள்ளை அருணகிரிநாதன்-வட்டக்கச்சி-கிளிநொச்சி)

**சிரஞ்சீவி** (வசந்தமணி ஏகாம்பரம் - வன்னேரிக்குளம் - கிளிநொச்சி)

**சுரேஸ்** (கந்தையா கனகலிங்கம்-உருத்திரபுரம் -கிளிநொச்சி)

**இதயாதேவரஞ்சினி** தம்பிராசா-புளியம்பொக்கணை கிளிநொச்சி)

**சுபன்** (கோவிந்தசாமி கணேசசேகரன்-தர்மபுரம்-கிளிநொச்சி)

**கிருஷ்ணா - மோகன்** (சிவகுமார் சுதன்-கண்டாவளை. பரந்தன் - கிளிநொச்சி)

**கப்டன் காசன்** (அல்லிராசா யோகேந்திரன்-பள்ளிக்குடா - பூநகரி)

**2-ம் லெப். சார்ஜகா** (மேரிமாக்கிரேற் தங்கராசா வட்டக்கண்டல்-மன்னார்)

**ஜனனி** [கமலாதேவி சுறுப்பையா-முருங்கன்-மன்னார்]

**றொசிற்றா** (செல்வி சுப்பு-பேசாலை-மன்னார்)

வலிகாமம் தாக்குதல் படைப்பிரிவுப் பொறுப்பாளரான,

**மேஜர் பவா** (நாராயணன் தனபாலன்-தும்பளை பருத்தித்துறை]

**லெப். பூபதி** (பிறேமலதா இராசமாணிக்கம்-சந்திஒழுங்கை-வல்வெட்டித்துறை)

**லெப். டொமினிக் மாஸ்ரர்** (நடேசன் குமரேசன்-நீர்வேலி வடக்கு யாழ்)

**லெப். மாதவன்** (யோகர் குணராஜ் - 4-ம் குறுக்குத்தெரு-பருத்தித்துறை)

**லெப். சண்** (வல்லிபுரம் புவனேந்திரராசா-நாவற்குழி-யாழ்)

**2-ம் லெப். கந்தசாமி** (வேலுப்பிள்ளை மகேந்திரன்-சுற்றோவளம், பருத்தித்துறை-யாழ்)

**2-ம் லெப். எட்றிச்** (சிவசாமி கிருபாகரன்-அல்வாய் மேற்கு, பருத்தித்துறை-யாழ்)

**2-ம் லெப். இரட்ணம்** (நித்தியானந்தசிவம் லகுபரன் - திலீபன் வீதி, கோண்டாவில் கிழக்கு - யாழ்)

**டொறின்** (தவராணி யோககுரு-வேம்படி-வல்வெட்டித்துறை)

**றொசானி** (தவராணி சிவசுப்பிரமணியம் - பொலிகண்டி-வல்வெட்டித்துறை)

**லோஜி** (கௌரிமலர் தர்மலிங்கம் - கேடில்ஸ்நகர், தெற்பலி- மிருசுவில்)

**காஞ்சனா** (சாந்தி அருமைதுரை - சுதுமலை தெற்கு - யாழ்)

**திலீப்** (தங்கவடிவேல் கிருஷ்ணகுமார் -சூராவத்தை, சுண்ணாகம் - யாழ்)

**கிரிசாந் / கல்கத்** (மார்க்கண்டு மதனரூபன் - புத்தூர் கிழக்கு - யாழ்)

**டயானி / டானியல்** (நடராசா வாசுதன் -நீதிமன்ற வீதி, மல்லாகம் - யாழ்)

**சேகர்** (ஏகாம்பரம் குணசேகரம் - நல்லூர்-யாழ்)

**ஈஸ்வரன்** (புஸ்பராஜா கஜேந்திரன்-சித்தங்கேணி, வட்டுக்கோட்டை - யாழ்]

**பிரதீப்** (பத்மநாதன் லட்சுமணன் - 4-ம் கட்டை, கோப்பாய் - யாழ்)

**இளஞ்செழியன்** (மருதலிங்கம் றதீஸ்குமார் - மல்லாகம் - யாழ்)

**சுருளி** (தெய்வேந்திரம் - வசந்தராசா - சுதுமலை-தெற்கு - மானிப்பாய் - யாழ்)

**மகான்** (முருகேசபிள்ளை - தியாகராசா -வண்ணார் பண்ணை - யாழ்)

1993-ம் ஆண்டு யாழ் மாவட்டத்தில் விபத்தில் விழுப்புண் அடைந்து சிகிச்சை பெற்று வரும் போது எமைப் பிரிந்த.

**லெப். தெய்வேந்திரன்** (தர்மலிங்கம் -விக்னேஸ்வரன் - சென்றல் வீதி திருமலை)

இதே தினத்தில் தமிழீழ எல்லைக்குட்பட்ட பிரதேசங்களிலும், கடற்பரப்பிலும் சிறீலங்கா முப்படைகளாலும் கொல்லப்பட்ட தமிழ்ப் பொது மக்கள்.

**ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.**

**தமிழீழ விடுதலைப்புலிகள்**

(சி- 10339)

யாழ்ப்பாணம் நல்லூர் பிரதேசநூலகம்.

# உளவளம் குன்றிய சிறார்களின் எதிர்காலத்திற்கு ஒளியேற்ற முனையும் 'ஆர்க்'

## அருட்சகோதரி ஸ்ரனிஸ்லொஸ் உடன் ஒரு சந்திப்பு - து. சசிகரன்

உளக் குறைபாடு காரணமாக சமுதாயத்தால் மட்டுமல்லாது பெற்றோர்களாலேயே ஒதுக்கி விடப்பட்ட சிறார்களுக்கு அன்புக்கரம் நீட்டி அரவணைக்கும் ஓர் ஸ்தாபனமே 'ஆர்க்' என்கிறார் அதன் நிர்வாகப் பொறுப்பாளராக இருந்து சேவையாற்றும் அருட்சகோதரி ஸ்ரனிஸ்லொஸ்.

உடுவில் மத்தியில் மகளிர் கல்லூரியின் பின்புறத்தில் அமைந்துள்ள இந்த ஸ்தாபனம் பற்றிய விபரங்களைத் திரட்டிக் கொள்ளும் நோக்குடன் புகுந்த எமக்கு பல அதிர்ச்சியான தகவல்கள் கிடைத்தன. எமது வாசக நேயர்களும் தெரிந்து கொள்ளும் வகையில் அதனை இங்கு பகிர்ந்து கொள்கிறோம்;

கேள்வி:- இந்த ஸ்தாபனத்தை எவ்வாறு உருவாக்கினீர்கள்?

பதில்:- இந்த ஊரைச் சேர்ந்த நலன்விரும்பி ஒருவர் இக்காணியை எம்மிடம் ஒப்படைத்து உளக் குறைபாடுடைய சிறுவர்களை அரவணைக்கும்படி கேட்டுக் கொண்டார் தரிசாகக் கிடந்த நிலத்தைப் பண்படுத்தி இக் கட்டிடத்தை 1978இல் அமைத்தோம்; இதற்கும் திரு அப்பாக்குட்டி என்பவரே நிதியுதவி செய்தார்.

கேள்வி:- இதனை நிர்வகிப்பவர்கள் யார்?

பதில்:- யாழ் ஆயர் தோமஸ் சௌந்தரநாயகத்தின் கீழ் திருக்குடும்ப கன்னியர்களாகிய நாம் நிர்வகித்து வருகிறோம்.

கேள்வி:- ஆரம்பிக்கும்போது சிக்கல்கள் எழுந்தனவா?

பதில்;- உளக் குறைபாடுடைய சிறார்களைக் கண்டுபிடிப்பதில் சிரமங்கள் இருந்தன. அதனால் பத்திரிகை மூலமாக விளம்பரம் செய்தோம். அதன் பின்பு சில பெற்றோர் எம்மை அணுகினார்கள். அதன் பின் நாம் நேரடியாக அவர்களுடைய வீடுகளுக்குச் சென்று குழந்தைகளின் நிலைமைகளையும் குடும்பப் பின்னணிகளையும் அறிந்து கொண்டோம். எல்லா உளக்குறைபாடுடைய சிறார்களையும் நாம் பொறுப்பேற்க முடியாது. அதனால் வயது அடிப்படையில் 7 தொடக்கம் 15 வயதுக்குட்பட்டவர்களை மட்டும் சேர்த்துக் கொண்டோம்.

கேள்வி;- வயதை மட்டும் தான் கருத்தில் கொள்கிறீர்களா?

பதில்:- இல்லை. உளக்குறைபாடுடைய குழந்தைகள் எல்லோரையும் எடுத்து அந்தஸ்துடையவர்களாக்க முடியாது. திருத்தி எடுக்கக் கூடியவர்களை மட்டுமே தேர்வு செய்கிறோம்-

கேள்வி;- எவ்வாறு தேர்வு செய்கிறீர்கள்?

பதில்;- கட்டிடவேலை நடைபெற்றுக் கொண்டிருந்தபோதே எமது அருட்சகோதரிகள் இருவர் கொழும்பு சென்று 'கிக்கடுவ' எனுமிடத்தில் இத்தகைய சிறார்களை வளர்ப்பது, திருத்தி எடுப்பது தொடர்பான இரண்டு வருடகால பயிற்சியைப் பெற்று வந்தனர். இவர்களே திருத்தி எடுக்கக் கூடியவர்களைத் தெரிவு செய்கின்றனர்.

கேள்வி:- விளக்கமாகக் கூற முடியுமா?

பதில்:- பயிற்சி பெற்ற அருட்சகோதரிகள் இந்த சிறார்களுடன் சில நிமிடங்கள் பழகுவார்கள் இதன்போது இவர்களது வழமையான நடவடிக்கைகளை அவதானித்து விடுவார்கள். பின்பு ஒரு படிவம் உள்ளது- அதனை பெற்றோரிடம் கொடுத்து நிரப்புவிப்போம் அதன் மூலம் குடும்ப நிலைவரங்களை தெரிந்து கொள்ளலாம் பின்பு இச்சிறார்களை உளவியல் டாக்டர் சோமசுந்தரத்திடம் அனுப்பிவைப்போம் அவர் இவர்கள் பற்றிய பூரண அறிக்கை ஒன்றை எமக்கு அனுப்புவார்- இதன் மூலம் நாம் அவர்கள்பற்றிய முழு விபரங்களையும் பெற்றிடுவோம்- அதன் பின் எம்மால் திருத்தி எடுக்க முடியும் என கருதுபவர்களை மட்டும் சேர்த்துக் கொள்வோம்

கேள்வி:- பலவிதப்பட்ட சிறார்களும் சேர்வதால் எப்படி இவர்களை உங்கள் வசப்படுத்துகிறீர்கள்?

பதில்;- ஓரிரு நாட்கள் அவர்களது நடவடிக்கைகளை நன்கு அவதானிப்போம் அதன் பின்பு அவர்களின் விருப்பத்திற்கே விடுவோம் சில பிள்ளைகள் தாங்கள் படிப்பிக்கப்போகிறோம். என்பார்கள் சரி படிப்பியுங்கள் என்று வெண்கட்டியை கொடுத்தால் கரும்பலகை அருகில்போய் சும்மாகீறிக்கீறி ஏதோ சொல்வார்கள் அப்படி விடும்போது அவர்கள் மிகவும் மகிழ்ச்சியடைகிறார்கள். தமக்குள் ஓர்பூரணதிருப்தியை அடைகிறார்கள் நாளடைவில் நாம் அவர்களுக்கு இப்படி அல்ல இப்படித்தான் எழுத வேண்டும் என சரியான வடிவத்திற்கு படிப்படியாக மாற்றி விடுவோம் விரல் சூப்பும் பிள்ளை இருக்கும். அதன் விரலை வெளியில் எடுத்தால் அழும் அதனால் அந்தபிள்ளையின் கையிற்கு வேலை கொடுப்போம் எதையாவது கையில் கொடுத்தால் அதை வாய்க்குள்வைக்கும் சற்றுப் பெரிதாக கொடுத்தால் நக்கிவிட்டு,விட்டு விடும் அப்படியே கை சூப்புவதை மறக்கமெல்ல மெல்ல வேறு வேலைகளைக் கொடுப்போம்

கேள்வி:- எல்லோருக்கும் கல்வி அறிவை புகட்டக் கூடியதாகவுள்ளதா?

பதில்:- இல்லை நாம் இங்குள்ள 42பிள்ளைகளையும் ஆறு பிரிவாக்கியுள்ளோம் ஒவ்வொருவரும் எதை எதை கூடுதலாக விரும்புகிறார்களோ அந்தத் துறையில் அவர்களை விடுவதற்காக அப்படி வகுத்துள்ளோம்- இதில் ஒரு பிரிவினர் மெதுவாக படிக்க எழுத வாசிக்கக் கூடியவர்கள் மற்ற பிரிவினர் விளையாட்டில் ஆர்வமுடையவர்கள் இன்னொரு பிரிவினர் பறவைகள் கோழிகளுடன் விளையாட ஆசைப்படுவர் என்றார்

கேள்வி:- விடுதிவசதிகள் உள்ளதா?

பதில்: இருபது பிள்ளைகள் மட்டும் தங்குவதற்கு வசதியுண்டு. இங்கு ஏழுமுதல் 15 வயதுவரையானவர்களை மட்டுமே வைத்திருக்கிறோம் மிகுதி வயது கூடியவர்கள் 22 பேர் உள்ளனர் இவர்கள் தினமும் வீடுகளிலிருந்து வந்து போவார்கள்.

கேள்வி:- உணவு பரிமாறப்படுகிறதா?



பதில்:- ஆம் அதில் எந்தவித பாரபட்சமும்காட்டப் படுவதில்லை. எல்லோருக்கும் ஒரே உணவைத் தான் மூன்று வேளையும் வழங்குகிறோம். நாங்களும் அவர்களுடன் சேர்ந்து அவர்கள் உண்ணும் உணவினையே உண்ணுகிறோம். ஐயர் பிள்ளை ஒன்றும் உள்ளது. அவருக்குமட்டும் மரக்கறி உணவு வழங்குவோம். கை பலவீனமான பிள்ளைகளும் உண்டு. அவர்களுக்கு கரண்டிமூலம் உணவு உண்ணப் பழக்கியுள்ளோம்.

கேள்வி:- பலவீனமான பிள்ளைகளை என்ன செய்கிறீர்கள்?

பதில்:- தினமும் காலையில் எல்லோருக்கும் யோகாசனப்பயிற்சி வழங்குகிறோம்- இதில் கை, கால் பலவீனமான பிள்ளைகளுக்கு அதற்கேற்ற முறையில் உடற்பயிற்சிகளும் செய்விக்கிறோம்.

கேள்வி:- வேறு ஏதாவது ஊக்குவிப்புகள்...''

> ''எமது வாழ்வை இவர்களுக்காகவே முழுமையாக அர்ப்பணித்து எந்நேரமும் அவர்கள் அருகில் இருந்து அன்பு, பாசம், கருணை காட்டி திருத்தி எடுக்கும் போது, இவர்களைப் பெற்றவர்கள் சமுதாயம் ஒதுக்கமுன் தாமே கட்டியும், பூட்டியும் வைத்து மேலும் உளக் குறைபாடுடைய சிறார்களாக வளர்த்துவருவது வேதனை தருகிறது''

பதில்:- ஒவ்வொரு தவணைக்கும் ஒவ்வொரு நிகழ்ச்சிகளை செய்கிறோம், கண்காட்சி, விளையாட்டுப்போட்டி உடற்பயிற்சி போட்டிகளை நடத்துகிறோம் இதில் இவர்களையே பழக்கிச் செய்விக்கிறோம்- இதன்மூலம் ஒவ்வொருவருடைய திறமைகளும் வெளிப்படுகின்றனபெற்றோர் தமது பிள்ளைகளின் செயற்பாடுகள் கண்டு பூரிப்படைகின்றனர்.

கேள்வி: இங்கிருந்து வெளியேறியதும் தொழில் வாய்ப்பைபெற வழி சமைக்கிறீர்களா?

பதில்: ஆம் கைத்தொழில் நிலையம் ஒன்றை அமைத்துள்ளோம். அதில் அவர்களின் உடல் உள வளர்ச்சிக்கேற்ப கயிறு திரித்தல், துடைப்பங்கள், பன்ன வேலைகள், மாலைகள், கடிதஉறை தயாரித்தல், பூவேலைகள், செய்யப் பழக்குகிறோம் அவற்றை சந்தைப் படுத்தியும் வருகின்றோம் இதன்மூலம் இச்சிறார்கள் எதிர்காலத்தில் வீட்டிலிருந்தவாறே வருமானத்தை பெறக் கூடியதாக இருக்கும். அதே வேளை அவர்களது புலன்களை வேறுதிசையில் திரும்பாதிருக்கவும் இது உதவுகின்றது

கேள்வி: இத்தகைய உளக் குறைபாடு எதனால் ஏற்படுகின்றதென கூறமுடியுமா?

பதில்: இச்சிறார்களின் பெற்றோரிடமிருந்தும் உளவியலாளரிடமிருந்தும் பெற்ற தகவல்களின்படி இவர்கள் கருவில் இருக்கும் போதே தாய் தாக்கப்படல். மது போதையில் வரும் தந்தை தாயை பலமாகத் தாக்குதல் அதிர்ச்சி, குடும்ப நிலைகள், கருச்சிதைவுகள், கூடுதலான மாத்திரைகளை பாவித்தல் போன்றவற்றாலேயே ஏற்படுகின்றன. மேலும் விமானக் குண்டுவீச்சு ஷெல் தாக்குதல் போன்றவற்றால் ஏற்படும் அதிர்ச்சியடைதலாலும் இத்தகைய குழந்தைகள் பிறக்கின்றனர். டாக்டர்கள், ஆசிரியர்கள் சாதாரண குடும்பத்தினர், ஏழைகள் எனப் பலதரப்பினருக்கும் இப்படியான குழந்தைகள் பிறந்துள்ளன-

கேள்வி: சிகிச்சை மூலம் குணப்படுத்த முடியாதா?

பதில்: சிலதரப்பினரை குணப்படுத்தமுடியும் ஆனால் பெரும்பாலான பெற்றோர்கள் அக்கறைகாட்டுவதில்லை மாறாக சமூகத்திற்குமுன்னர் இவர்களே தமக்கு பிறக்கும் இத்தகைய குழந்தைகளை வெறுப்புடன் நோக்குகின்றனர் சமூகத்தில்தமது அந்தஸ்து குறைந்துவிடும் எனக்கருதுகின்றனர் அதனால் இவர்கள் இத்தகைய சிறார்களை மறைவான இடங்களில் கட்டிவைத்தே வளர்த்துவருவதைநாங்கள் நேரடியாகவே கண்டிருக்கின்றோம். தமது மற்றைய குழந்தைகளை தூக்கி மகிழ்கின்றனர். உறவினர்கள்வரும்போது கூட இத்தகைய சிறார்களையே முன்னுக்கு விடுகின்றனர். உளக் குறைபாடுடைய சிறார்களை மறைத்துவிடுகின்றனர்.

கேள்வி: பெற்றோருக்கு ஏதாவது கூற விரும்புகிறீர்களா?

பதில்: பிரதி ஞாயிறுதோறும் அவர்களை இங்கு அழைத்து கருத்தரங்குகளை நடத்துகிறோம்; பிள்ளைகளை எவ்வாறு எப்படி வளர்க்க வேண்டும் என ஆலோசனை கூறுகிறோம், பெற்றோர் இத்தகைய பிள்ளைகளுடன் கூடுதலான நேரத்தை செலவிட வேண்டும். நாம் இங்கு அவர்களுடன் அன்பு, பாசத்தை காட்டியே திருத்துகிறோம். அதே போன்று சிறார்கள் வீட்டில் இருக்கும் வேளைகளில் பெற்றோரும் அதனை பின்பற்ற வேண்டும். பிள்ளைகள் பெற்றோருடனும் இருக்க வேண்டும் என்பதற்காகவே தவணை விடுமுறைகளை விடுகிறோம். சிலபெற்றோரே இதனைப்பின்பற்றுகின்றனர் அத்தகைய பெற்றோரின் குழந்தைகள் விரைவில் தேறிவருகிறார்கள் மற்றைய குழந்தைகள் திரும்பி வரும் போது பழைய நிலையிலேயே வந்து சேருகின்றனர் இதனால் நாம் பல கஷ்டங்களை சந்திக்க நேரிடுகின்றது நாம்ஏதோ புதுமை செய்தே இவர்களை திருத்துவதாக பெற்றோர் நினைக்கின்றனர் அன்பு, பாசம், உணவு, அரவணைப்பு இவையே இத்தகைய சிறார்களுக்கு தேவை என்பதை பெற்றோர் உணர்ந்து கொள்ள வேண்டும்

கேள்வி; இவற்றுக்கான உதவிகளை எவ்வாறுபெறுகிறீர்கள்?

பதில்: பல அரசசார்பற்றநிறுவனங்கள் எமக்கு தேவையானபோது சகல உதவிகளையும் செய்து தருகிறார்கள் நாம் கேட்டால் மறுக்காது செய்து தர காத்திருக்கிறார்கள்.

கேள்வி:- தாங்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள்...

(9 ஆம் பக்கம் பார்க்க)

# சந்திரிகாவின் ஒரு மாதகால ஆட்சியும் இனப்பிரச்சினை தீர்வும்

பொது ஜன ஐக்கிய முன்னணி அரசாங்கம் பதவி ஏற்று இன்னும் இருதினங்களில் ஒரு மாதகாலம் நிறைவுறுகின்றது. இக்காலப் பகுதியில் பல்வேறுபட்ட விடயங்களில் புதிய அரசாங்கம் கவனம் செலுத்தியது போன்று, இனப்பிரச்சினை விவகாரத்திலும் அக்கறை காட்டியது என்றே கொள்ள வேண்டும்.

இனப்பிரச்சினையைப் பொறுத்து கொள்கை அடிப்படையில், பொது ஜன ஐக்கிய முன்னணி அரசாங்கம் முன்னைய ஐ தே. க அரசாங்கத்தை விட முற்போக்கான கொள்கையைக் கொண்டுள்ளது என்பதை இற்றை வரை அது மேற்கொண்ட நடவடிக்கைகள், இது தொடர்பாக வெளியிடும் அறிவிப்புக்கள் வெளிப்படுத்துபவையாகவுள்ளன.

இந்த வகையில் வடக்கு-கிழக்கில் நிலவுவது இனப்பிரச்சினையே என்பதை ஏற்றுக்கொண்டுள்ளதோடு, அதற்கு அரசியற்தீர்வு காணப்பட வேண்டும் என்பதையும் பொது ஜன ஐக்கிய முன்னணி அரசாங்கம் ஏற்றுக் கொண்டுள்ளது. அடுத்ததாக, விடுதலைப்புலிகள் இயக்கமே தமிழ் மக்களின் முக்கிய பிரதிநிதிகள் என்பதையும் புதிய அரசு ஒப்புக் கொண்டுள்ளமையானது இனப்பிரச்சினை விவகாரத்தில் முன்னேற்றகரமான அம்சம் என்பதில் ஐயமில்லை.

இதேவேளை இனப்பிரச்சினை விவகாரத்தில் பிரதமர் சந்திரிகா மேற்கொண்ட சில நடவடிக்கைகளும் அவரின் நல்லெண்ண முயற்சிகளைக் காட்டுவதாகவே அமைந்துள்ளன. இந்தவகையில், வடபகுதி மீது விதிக்கப்பட்டிருந்த பொருட்கள் மீதான தடையில் இருந்து ஒரு தொகுதிப் பொருட்களுக்கு விலக்கு அளித்தமை இனப்பிரச்சினை தீர்விற்கு நல்லெண்ண சூழ்நிலை ஒன்றை உருவாக்கும் முயற்சியாகவே கொள்ளமுடியும்.

மேலும் இவ்விடயத்தில் இவ் ஒரு மாத காலத்தில் பிரதமர் சந்திரிகா குமார துங்கா சாதித்த முக்கியமான விடயம் விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் கடித மூலமான நேரடித் தொடர்பை ஏற்படுத்திக் கொண்டமையாகும். இதற்கு, அரசாங்கத்தின் நல்லெண்ண முயற்சிகளுக்கு தனது நல்லெண்ண நடவடிக்கையாக 10 போர்க் கைதிகளை விடுதலை செய்து தலைவர் பிரபாகரன் அது தொடர்பாக விடுத்ததொரு அறிக்கையை அரசாங்கம் பயன்படுத்திக் கொண்டது.

இவ் அறிக்கைக்கு நேரடியாக தலைவர் பிரபாகரனுக்குப் பதில் அளித்த பிரதமர் சந்திரிகாகுமாரதுங்கா, ஆரம்பப் பேச்சுவார்த்தைக்கான விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளையும் நியமிக்குமாறும் கோரியிருந்தார். இந்த வகையில் விடுதலைப்புலிகளுடன் நேரடித் தொடர்பை ஏற்படுத்திக் கொண்ட பிரதமர் சந்திரிகாவிற்கு விடுதலைப் புலிகள் தரப்பில் இருந்தும் சாதகமான பதில் கிடைக்கப் பெற்றது.

இந்த வகையில், இனப்பிரச்சினை தொடர்பாக தமிழர் தரப்பு நல்லெண்ண சமிக்கைகளைக்காட்டியமையானது பிரதமர் சந்திரிகா குமார துங்காவின் முயற்சிகளுக்கு உறு துணையாக இருந்ததெனலாம். இதனை முதற்கட்ட முன்னேற்றம் என்று கூடக் கூறலாம்.

ஆனால் இனப்பிரச்சினைக்கு அரசியற் தீர்வு காண்பதில் பொது ஜன ஐக்கிய முன்னணி அரசாங்கம் இவ் ஒரு மாத காலப் பகுதியில் இராணுவத்திடம் இருந்து எதிர் நோக்கியுள்ள முட்டுக் கட்டையானது இவ்விவகாரத்தில் அதன் முன்னேற்றத்தைப் பாதிப்படையச் செய்துள்ளதோடு இனப்பிரச்சினை விவகாரத்தில் அடுத்த கட்ட நடவடிக்கையையும் சிக்கலாக்கியுள்ளதெனலாம்.

இனப்பிரச்சினை தீர்வு விவகாரம் என்பது தற்பொழுது தனியாக அதிகாரப் பரவலாக்கலோடு மட்டும் தொடர்புடையதல்ல; அதற்கு முன்னரே பல படிகள் கடக்கப்பட வேண்டியவிவகாரமாகவும் உள்ளது. இதில் முக்கியமானதாக, தமிழ் மக்களின் அடிப்படை உரிமைகளுக்கு மதிப்பளிக்கப்பட வேண்டும் என்பதோடு, சமாதானப் பேச்சுக்கள் மூலம் இனப்பிரச்சினைக்கு அரசியற் தீர்வு காணப்படுவதற்கான ஒரு சமாதான சூழ்நிலையும் உருவாக்கப்பட வேண்டியுள்ளது.

இந்த வகையில், இனப்பிரச்சினைக்கான தீர்வின் ஆரம்பகட்ட நடவடிக்கையாக பொருளாதாரத் தடை நீக்கம் போக்குவரத்துப் பாதை திறப்பு, யுத்த நிறுத்தம் ஆகிய அம்சங்கள் முக்கியம் பெற்றன. இதனைப் பிரதமர் சந்திரிகா தலைமையிலான புதிய அரசாங்கமும் உணராமல் இல்லை.

இந்த வகையில் அரசாங்கம் பதவி ஏற்றுக்கொண்டதும், பொருளாதாரத் தடை நீக்கத்தில் அக்கறை காட்டியது வெளிப்படை. இதன் மூலம் நல்லெண்ண சூழ்நிலையை முதலில் உருவாக்கலாம் எனவும் அரசாங்கம் கருதியிருந்தது. இதன் ஆரம்பகட்ட நடவடிக்கைகளை பிரதிப்பாதுகாப்பு அமைச்சராகப் பொறுப்பேற்றுக் கொண்ட கேணல் அனுருத்த ரத்வத்த மேற்கொண்டார்.

ஆனால் எதிர்பார்த்த அளவு சுலபமாக காரியம் இருக்கவில்லை. இராணுவத்தரப்பு வெளிப்படையாக அரசியல் தீர்விற்கு ஆதரவாக பேசிக் கொண்ட போதிலும் அரசியற்தீர்விற்கான ஆரம்ப முயற்சியான நல்லெண்ண சூழ்நிலையை உருவாக்கும் முயற்சிகளுக்கு முட்டுக்கட்டை போட்டது. பொருளாதாரத் தடை நீக்கத்தையோ, இது தொடர்பான ஏனைய நடவடிக்கைகளுக்கோ இராணுவம் ஒத்துழைக்கவில்லை என்றே கூறலாம்.

இந் நிலையில், தனது இராணுவம் தொடர்பான அணுகுமுறை தோல்வியில் முடிவடைந்து விட்டதை வெளிக்காட்ட விரும்பாத அரசாங்கம், இராணுவத் தரப்பு தடைவிதிப்பதில் ஆர்வம் காட்டாத 28 பொருட்களின் மீதான தடையைத் தளர்த்தியது.

ஆனால், வெளிப்போர்வைக்கு இராணுவமும் இப்பொருள்கள் தடை நீக்கத்திற்கு ஒத்துழைப்பு வழங்கியதாகவும், வரவேற்றதாகவும் ஒருவிதமாயை உருவாக்கப்பட்டது. உண்மையில் தற்பொழுது தடை நீக்கப்பட்ட பொருள்கள் பற்றி இராணுவம் எதுவித அக்கறையும் காட்டவில்லை என்பதே உண்மையாகும். ஏனெனில் தற்பொழுது தடைநீக்கப்பட்ட பொருள்களில் ஒரு சிலவற்றை தவிர மிகுதியானவற்றையும் வடக்கில் பெற்றுக் கொள்ள முடியும் என்பதினாலோ அன்றி தடைநீக்கப்பட்ட பொருள்களினால் தமக்கு பாதிப்பு ஏதும் இல்லை என்பதை இராணுவம் உணர்ந்தமையினாலோ இருக்கலாம்.

ஆனால் ஏனைய பொருள்கள் விடயத்தில் இராணுவம் தனது நிலைப்பாட்டை மாற்றிக் கொள்ளவில்லை. இந்த நிலையில் அரசாங்கம் இராணுவத்துடன் முரண்பாடு கொள்ளாது கண்ணியமாகப் பின் வாங்கிக் கொண்டுவிட்டது என்றே கூறமுடியும்.

இதை ஒத்த நிலையே போக்குவரத்துப்பாதை திறத்தல், யுத்தநிறுத்தம் என்பவை தொடர்பானவையும் ஆகும். பதவி ஏற்ற காலத்தில் விடுதலைப்புலிகள் இயக்கம் ஒத்துழைப்பு நல்கினால் பூநகரிப் பாதையைத் திறக்க அரசாங்கம் தயாராக இருப்பதாக அறிவித்து வந்த பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்த தற்பொழுது விடுதலைப்புலிகளின் ஒத்துழைப்பு கிடைத்திருப்பினும், பூநகரிபாதை திறப்பதுபற்றிய பேசுவதைத் தவிர்ப்பதாகத் தெரிகின்றது. இதற்கு இராணுவத் தரப்பின் முழுமையான எதிர்ப்பே காரணமாகும் அதாவது தனதுநிலையில் இருந்து இராணுவம் சிறிதும் பின்வாங்காது என்ற நிலையில் பூநகரிப் பாதையை திறப்பது தொடர்பாக அரசாங்கம் தனது நிலைப்பாட்டை மாற்றிக் கொண்டிருப்பது போன்று உள்ளது.

யுத்த நிறுத்தம் தொடர்பான அரசாங்கத்தின் நிலைப்பாடும், இவ் வாறானதொரு நெருக்கடிக்குள்ளாகியுள்ளது என்றே கூறலாம்; "சமாதான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் போது எடுக்கப்படும் இராணுவ நடவடிக்கைகள் சமாதானப் பேச்சு வார்த்தைக்கான சூழ்நிலையைச் சீர்குலைக்கும்" என பிரதமர் சந்திரிகா குமாரதுங்கா பகிரங்கமாகக் குறிப்பிட்டிருந்த போதும் அவரால் இனப்பிரச்சினைக்கு அரசியற் தீர்வு காண்பதற்கென ஒரு யுத்த நிறுத்தத்தை அமுல்படுத்தக் கூடிய நிலை இன்றில்லை.

ஒருவகையில் இதற்கான அதிகாரம் பாதுகாப்பு அமைச்சரான ஜனாதிபதி டி. பி. விஜேதுங்காவிடம் இருப்பது சற்று சிக்கல்களை உருவாக்கியிருக்கக்கூடியதாயினும் இராணுவத் தரப்பின் எதிர்ப்பே பிரதமர் சந்திரிகா இவ்விடயத்தில் வெற்றி பெற முடியாதுபோய்விட்டதற்குக் காரணமாகும். ஏனெனில் தேர்தலில்தோல்வி அடைந்தபின்னர் ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கத்துடன் முரண்பாட்டை வளர்த்துக்கொள்ளாது செயற்பட்டுவந்தார் என் பதினால் ஜனாதிபதிமுட்டுக்கட்டை போட்டார் என்று கருதமுடியாது

இவ் விடயத்தில், பிரதமர் சந்திரிகா குமாரதுங்கா நேரடியாக எடுத்துக்கொண்ட முயற்சியும் தோல்வியிலேயே முடிவுற்றது எனலாம். ஆரம்பத்தில் இவ் விடயத்தை பிரதிப்பாதுகாப்பு அமைச்சரே இராணுவத்தினருடன் கையாண்டு வந்தாராயினும் முட்டுக்கட்டை தோன்றியபோது பிரதமர் சந்திரிகாவே இதுதொடர்பாக முப்படைகளின் தளபதிகளையும், உயர் பாதுகாப்புப்படைஅதிகாரிகளையும், களத்தில் உள்ள அதிகாரிகளையும் சந்தித்து உரையாடத் தீர்மானித்தார்.

சுமார் நான்கு மணித்தியாலங்களுக்கு மேல் நடந்த இந் நீண்ட சந்திப்பில் எதுவித முடிவும் எடுக்கப்படவில்லை. இச்சந்திப்பின்போது வடக்கு-கிழக்குப் பிரச்சினையைப் பிரதமர் கேட்டு அறிந்து கொண்டார் எனத் தெரிவிக்கப்பட்டபோதும் இச்சந்திப்பானது பிரதமர் சந்திரிகா குமாரதுங்காவிற்கு வெற்றி அளிக்கவில்லை என்றே கூறவேண்டும்.

இச்சந்திப்பில் பிரதமர் யுத்த நிறுத்தம் பற்றிப் பேசவில்லை எனப் பின்னர் தெரிவிக்கப்பட்டதாயினும், அது எந்தளவிற்கு உண்மை என்பதைத் தெரிந்து கொள்ள முடியாது ஆனால் நான்கு மணித்தியாலங்கள் நீடித்த இச்சந்திப்பில் முக்கியமான விடயங்கள்எவையும்பேசப்படவில்லை என்பது ஏற்புடையதொன்றாகக் கொள்ள முடியாது. ஆயினும், சில சமயம், யுத்த நிறுத்தத்திற்கும் இராணுவம் இன்றைய நிலையில் இருந்து பின்வாங்குவதற்கும்தயாராகஇல்லை என்பதைத் தெளிவுபட அறிந்திருப்பின் இக்கோரிக்கையை பிரதமர் சந்திரிகா முன்வைக்காமலும் இருந்திருக்கக்கூடும்.

இவ்வாறாகபிரதமர்சந்திரிகாவின் முயற்சியும் தோல்வியுற்ற நிலையிலேயே படைமுகாம்களுக்கு விஜயம் செய்து சூழ்நிலைகளை அவதானிப்பதென அரசாங்கம் முடிவு செய்தது. இராணுவ முகாம்களுக்கு விஜயம் செய்யும் இம் முடிவானது சமாதான முயற்சி தொடர்பாக இராணுவத்தினரின் நிலைப்பாட்டைக் கேட்டறிவதற்கும், அரசாங்கத்தின் நிலைப்பாட்டை விளக்குவதற்கும் எனக் கூறிக்கொள்ளப்பட்ட போதிலும், இது அரசாங்கத்தின் கொள்கை தொடர்பாக களத்திலுள்ள இராணுவத்தினரின் நாடி பிடிக்கும் செயலாகவே இருந்தது ஆனால், இதுவும் அரசிற்குத் திருப்தி அளித்திருக்க நியாயமில்லை. இராணுவத்தினர் எழுப்பிய கேள்விகளுக்கு அரசாங்க தரப்பு பணிந்தே பதில் இறுக்க வேண்டி வந்தது.

அரசாங்கம் இராணுவத்தின்மீது எதுவித அழுத்தத்தையும் பிரயோகிக்கக்கூடிய நிலையில் இல்லை என்பதை பிரதமர் சந்திரிகா குமாரதுங்க தலைவர் பிரபாகரனுக்கு எழுதிய கடிதத்தில் இருந்தே புரிந்து கொள்ள முடியும். சமாதான முன் முயற்சியாக எழுதப்பட்ட அக்கடிதத்தில் இராணுவத்துடன் தொடர்புடைய எந்தவகை அம்சங்களும் இடம்பெறவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது

ஜெயராஜ்

இது இராணுவத்துடன் தொடர்புடையவிடயங்களை அரசாங்கம் விரும்பியது போன்று கையாள முடியாமல் உள்ளதையே காட்டுவதாகவுள்ளது.

இந்த வகையில் பார்க்கும் போது இனப்பிரச்சினை விவகாரத்தில் இராணுவத்தின் அழுத்தத்திற்குச் சந்திரிகா அரசாங்கம் பணிந்து போய்விட்டது என்பதே உண்மையாகும். இதன் காரணமாக இனப்பிரச்சினை விவகாரத்தில் அரசாங்கத்தின் நிலைப்பாட்டில் பின்னடைவு ஒருமாத கால ஆட்சிக்குள்ளேயே காணப்பட்டுள்ளதெனலாம்.

இந்த நிலையில் முதலாவது கட்டத்தில் பிரதமர் சந்திரிகா குமாரதுங்காவின் அரசாங்கம் இராணுவத்தின் எதிர்ப்பை ஒருவாறு மூடி மறைத்து ஒருபடி முன்னேறியுள்ளது என்றாலும் இராணுவத்தின் எதிர்ப்பு தொடர்ந்து இருக்குமானால் அரசின் இரண்டாம், மூன்றாம் கட்ட முன்னேற்றங்கள் பெரிதும் நெருக்கடி மிக்கதாகவே இருக்கும்.

## இப்போது அறிமுகமாகின்றது

# “உலகையே அதிரவைக்கும் அணுவாற்றல் பயங்கரவாதம்”

பாலகுமாரன்

இப்போது உலகெங்கும் இவ்விடயம் பற்றியே மிகப் பரபரப்பாக பேசப்படுகின்றது; மிக்க அச்சமூட்டும் தகவல்கள் இது பற்றியே இப்போது மேற்குலக புதின ஏடுகளில் வெளியாகின்றன. அணுவாற்றல் பயங்கரவாதம் (Nuc - lear Terrorism) என்கிற பெயரில் புதுவகைப் பயங்கரவாதம் இப்போது உலகிற்கு அறிமுகம் செய்யப்படுகின்றது. இதுவரை காலமும் பொதுவுடமைக் கருத்துக்களை, விடுதலை அமைப்புக்களின் போராட்டங்களை, இசுலாமிய உலகின் போக்கினையெல்லாம்பயங்கரவாதம் என பட்டியலிட்டு வகைப்படுத்தி வந்த மேற்குலகம் இப்போது இது பற்றி அலறுகின்றது. இதற்கும் ருஷ்யாவே காரணம் என குற்றமும் சாட்டப்படுகின்றது. ருஷ்யாவிலிருந்து அணுவாயுதங்கள், அணுக்குண்டு போன்றவை தயாரிக்கப்பயன்படக்கூடிய அதிசக்தி வாய்ந்த கதிர்வீச்சு அபாயமுள்ள யுரேனியம் புளுட்டோனியம் போன்றவை தொடர்ந்து கடத்தப்படுவதாக இப்போது தெரிவிக்கப்படுகின்றது. குளவிக் கூட்டை கல்லெறிந்து கலைத்தது போல் இப்போதைய நிலை இருக்கின்றது. முன்னைய சோவியத் ஒன்றியத்தின் வீழ்ச்சிக்குக் காரணமானவர்கள், அதன் வீழ்ச்சியை துரிதப்படுத்தியவர்கள் அதன் பாரிய பக்க விளைவுகள் கண்டு கலங்கிப் போயுள்ளனர்.

### புதிய வகைக் கடத்தல்

சென்ற மாதம் 10-ம் திகதி மொஸ்கோவிலிருந்து ஜேர்மனிய நகரான மியுனிச்சிற்கு பயணம் மேற்கொண்ட லுப்தான்சா விமானத்தில் வந்த ஒரு கறுப்புநிற சூட்கேசொன்றை சோதனையிட்ட போதே பெரும் அதிர்ச்சிநேர்ந்தது. இப்பெட்டியுள் மறைத்து வைக்கப்பட்டிருந்த ஈயத்தாலும் உருக்காலும்செய்யப்பட்ட சிறிய கொள்கலன் ஒன்றினுள்ளே விசித்திரமான பொருள் ஒன்றிருந்தது. அணுவாயுத தயாரிப்பிற்குஉகந்த புளுட்டோனியம் - 239-10 (பத்து) அவுன்ஸ் அதிலிருந்தது இதனை காவிவந்தவர் ஒரு கொலம்பிய நாட்டு வணிகர். இதுவரை காலமும் இப்படியானதொரு பாரிய கடத்தல் நிகழ்வு எவராலும் கேள்விப்பட்டதாகவில்லை இதன்பின் இரண்டு நாள் கழித்து இன்னொருஜேர்மனியநகரானபிறீமன் எனுமிடத்திலுள்ள சிறிய புகையிரத நிலையமொன்றில் .05 கிராம் நிறையுள்ள மிகச்சிறிய அளவு புளுட்டோனியத்தை விற்பனைக்காக மாதிரிக்காக எடுத்துக் காட்டிய ஜேர்மனியர் ஒருவர் கைதானார்: ஏனென்றால் அவர் தனது பண்டத்தை விற்க முயன்றவர் ஒரு காவல் துறை உளவாளி என்பது அவருக்கு தெரியாது. இப்படியாக பல சம்பவங்கள் அண்மைக் காலத்தில் நடந்தேறியுள்ளன. இவையெல்லாம் அனேகமாக ருஷ்யாவில் பரந்து கிடக்கும் அணுவாயுத ஆய்வு கூடங்களிலிருந்தும் பல்வேறு அணு மையங்களிலிருந்தும் கடத்தி வரப்பட்டதாக தெரிகின்றது. 1991-ம் ஆண்டிலிருந்தே இப்படியான கடத்தல் சம்பவங்கள் நூற்றுக் கணக்கில் நடந்ததாக கூறப்படுகின்றது. எனினும் இவற்றில் பல ஏமாற்று, மோசடிக்காரர்களின்நடவடிக்கையாக இருப்பதால் உண்மையாக கடத்தப்பட்ட ஆபத்தான யுரேனியம் -235- புளுட்டோனியம்- 239 எவ்வளவு என்பது எவர்க்கும் தெரியாது: அத்தோடு இன்னொரு சிக்கலும் இங்கே யுண்டு: கடத்தப்படும் இப்பொருட்களை வேண்டும் முகவர்களாக பல்வேறு ஐரோப்பிய நாடுகளின் உளவுநிறுவன உளவாளிகள் செயற்படுவதால் சந்தையில் இப்பொருட்கட்கான கேள்விகள் அதிகரிக்கும் அபாயமும் தோன்றிவிட்டதாக கூறப்படுகின்றது மொத்தத்தில் முடிவும். தொடக்கமும் தெரியாத மருமக் கதைபோல் இக் கடத்தல் நிகழ்ச்சிகள் தொடர்கின்றன.

### ருஷ்யாவே பொறுப்பு

ஏனைய கிழக்கைரோப்பிய முன்னைய சோசலிச நாடுகளிலிருந்தும் இப்படியானகடத்தற்சம்பவங்கள்நடக்க வாய்ப்பிருந்த போதும் ருஷ்யாவே இரண்டு பிரதான காரணங்களால் பெரிதும் சந்தேகப்படும் நாடாக மாறிவிட்டது. முன்னைய காலத்தில் சோவியத்தின் சிறப்புக்கும் மாண்பிற்கும் மகிமைக்கும் காரணமானவர்களாக போற்றப்பட்டஅறிவியல்ஆய்வாளர், ஆய்வுகூடஅறிவியலாளர்தொழில்நுட்பமேதைகள்விண்வெளி ஆய்வாளர் போன்றோரின் இன்றைய நிலை மிகப் பரிதாபகரமானதாக மாறி விட்டது. கடந்த நான்கு வருடங்கள் இவர்களது வீழ்ச்சிக் காலமாகி விட்டது 3000 இற்கு மேற்பட்ட அணுவாற்றல் விஞ்ஞானிகள் இன்று மிகக் குறைந்த வேதனமே பெறுகின்றனர். மொசுக்கோ நகரின் பேரூந்து ஓட்டுனரை விட இவர்கள் வேதனம் குறைவு மொத்தமாக 7½ - 10 இலட்சத்திற்கு இடைப்பட்ட தொழில் நுட்ப உதவியாளர், ஆய்வுகூட பணியாளர் போன்ற பலர் பல மாதகாலமாகவே வேதனமின்றி வறுமையின் பிடியில் சிக்கித்தவிப்பதாக கூறப்படுகின்றது. இப்போது பல அணுவாற்றல் ஆய்வுகூட மையங்களில் அணுவாயுத தயாரிப்பு ஆலைகளில் கதவடைப்புக்கள் வேலை நிறுத்தங்கள், நடைபெறுவதாக தெரிகின்றது. எனவே முன்னைய உயர்வாழ்க்கைத் தரத்தையும் சமூக மதிப்பையும் இழந்த இவர்களில் பலர் குறுக்கு வழிகளை மாற்று வழிகளை நாடுவதாக தெரிகின்றது இதனால் இவர்கட்கு தம்மால் இலகுவில் பெறமுடிகின்ற இத்தகைய பொருட்களை திருடி பாரிய தொகைக்கு விற்க முடிகின்றது. இதற்கு வசதியாக இன்னொரு பிரதான காரணமும் உண்டு. இன்று ருஷ்யாவில் 5000க்கு மேற்பட்ட இரகசிய உலக வன்முறைக் குழுக்கள் (மாபியாவை ஒத்தன) கொடிகட்டி கோலோச்சுகின்றன இவர்கட்கு சருவதேச அளவிலான பாரிய இரகசிய உலக கடத்தற்குழுமங்களோடு நெருங்கிய தொடர்பு இருப்பதால் இவர்கள் இத்தகைய அணுவாற்றல் பயங்கரவாதத்தின் மூலமாகி விட்டனர். இப்போது மேற்குலக உளவு நிறுவனங்களை அலைக்கழிக்கும் கேள்வி இப்பொருள்கள் இறுதியில் எவர் கையில் போய் அடையப் போகின்றன என்பதுதான்.

### அபாய அறிவிப்பு

பொதுவாக ஒன்றில் இவை வட கொரியா, ஈரான், பாக்கிஸ்தான் போன்ற நாடுகட்கோ அல்லது பாரிய இரகசிய உலக குழுமங்கட்கோ இசுலாமிய உலக மத அடிப்படைவாத அமைப்புகட்கோ போய்ச் சேரலாம் என அஞ்சப்பட்டாலும் எவை குறித்தும் சரியான தகவல்கள் இன்னமும் கிடைக்கவில்லை எனப்படுகின்றது. எனினும் இத்தகைய மிகச் சிறிய கிராம் கணக்கான கடத்தல்களால் ஒரு அணுக்குண்டை தயாரிப்பதற்கான அளவு மூலங்களை கடத்தமுடியாது என்று அணுவாற்றல் ஆய்வு மையம் குறிப்பிடுகின்றது. எனினும் சிறுகச் சிறுக கடத்தினால் பெருமளவு சேரும் என்பதோடு மிகச் சிறியளவிலான குட்டி அணுக்குண்டு வகைகள் தயாரிக்க முடியும் என்றும் சிலர் குறிப்பிடுகின்றனர். அதே வேளை நாகசாக்கிகிரோசிமாபோன்ற இடங்களிலே வீசப்பட்ட குண்டுகளையொத்த அழிவு சக்தியுள்ளவற்றை தயாரிக்க 94 விழுக்காடு செறிவுள்ள புளுட்டோனியம்-239ஆயின் 8கிலோ தேவைப்படும். யுரேனியமாயின் 25 கிலோ தேவைப்படும் எனக் கூறப்படுகின்றது.

அணுக்குண்டு தயாரிப்பு தொழில்நுட்பம் பெறக் கூடியதாயினும் முறையான அதிநவீன ஆய்வுகூடமொன்றிலே இவற்றினைத் தயாரிக்க முடியும். எனவே இத்தகைய வசதிகள் எல்லார்க்கும் கிட்டுமா என்றும் வினா எழுப்பப்படுகின்றது. எனினும் யப்பானில் முன்னர் வீசப்பட்ட குண்டு 1360தொன் ரிஎன்ரி(T.N.T) வெடிப்பொருளை ஒத்ததாக இருந்தாலும் சிறிய அளவிலான அணுப்பிளவு, வெடிப்புக்கள் சில ஆயிரம் கிலோ ரிஎன்ரி வெடிப் பொருள் சக்தியுடையதாக ஒரு சிறிய ''டிரக்'' வண்டியிலோ பெரிய வானிலோ கொண்டு செல்லத்தக்கதாக தயாரிக்க முடியும் என ''டைம்'' இதழ் கூறுகின்றது. இதன் வெடிப்பால் 1 இலட்சம் பேரை இலகுவில் கொல்ல முடியும் என்கிறது இவ் இதழ். அதே சமயம் அமெரிக்க ''நியூஸ் வீக்'' இதழோ 10 அவுன்ஸ் புளுட்டோனியமே ஒரு பெருநகர நீர் விநியோக அமைப்புக்கு செலுத்தப்பட்டால் அல்லது வெளியில் எரிக்கப்பட்டு காற்று மண்டலத்தில் கலக்க விடப்பட்டால் விளைவுகள் பெருவிபரீதத்தை-பலமிலியன் மக்கள் உயிரை பறிக்க முடியுமென பலமாக அச்சுறுத்துகின்றது.

### மேற்குலகச் சதி

இத்தகைய செய்திகள் ருஷ்யாவை பெருத்த இக்கட்டில் மட்டுமல்லாமல்பெரும் அவமானத்திற்கும் தள்ளி விட்டது. தொடர்ந்தும் ருஷ்யாவிலிருந்தும்இக்கடத்தல்கள் தொடர்பான செய்திகள் வெளிவந்த வண்ணமேயுள்ளன. எதுவும் திருட்டுப் போகவில்லை எனக் கூறும் ருஷ்ய அதிகாரிகள் எப்போதுமே மேற்குலகிற்கு குறிப்பாக அமெரிக்க, ஜேர்மனிய,பிரான்சிய அணுவாய்வு நிறுவனங்கட்கு ருஷ்யாவின் அணுவாற்றல் வளர்ச்சி குறித்து பெரும் பொறாமை என்கின்றனர். எனவே இத்தகைய செய்திகளை வெளியிட்டு ருஷ்ய நிலையை இழிவுபடுத்துவதோடு ருஷ்ய அணுவாற்றல் தொழிலை தமது கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவர முயல்கின்றனர், என பெறுமதியான காரணமொன்றை கூறுகின்றனர். ருஷ்யாவைப் பொறுத்தவரை இன்று தனது அணுவாற்றல் துறையை நாட்டின் பெருமைக்குரிய துறையாக - மாற்றான் தலையீட்டிற்கு புறம்பான துறையாகவே கருதி வரப்படுகின்றது. அத்தோடுஅணுவாயுதங்களை கட்டுப்படுத்தல் தொடர்பான உடன்பாட்டின்படி வருடாந்தம் 2000 ஏவுகணைகளில் பொருத்தப்பட்டிருக்கும் வெடிப்பு முனைகளை (War heads) செயலிழக்க செய்து அழிக்க வேண்டும். இப்போது சராசரியாக நாளாந்தம் 5 அணுவாற்றல் ஏவுகணைகள் செயலிழக்கச் செய்யப்படுகின்றன. இதிலிருந்து பெறப்படும் சிறிய அளவிலான (Pits) பிட்ஸ் எனப்படும் புளுட்டோனியம் பெருமளவில் இப்போது ருஷ்யாவில் களஞ்சியப்படுத்துகின்றது. இவை உடனடியாகவே அணுவாயுதம் தயாரிப்பதற்கு உகந்தவை: ருஷ்யாவைப் பொறுத்தவரையில் இத்தகைய அணுவாயுத கூடங்கள் மிக்க பாதுகாப்பாகவிருந்த போதும் ஏனைய அணுவாற்றல் ஆய்வுமையங்கள், அணுமின்னுற்பத்தி நிலையங்கள் போன்ற பல இன்று பெரிதும் பாதுகாப்பற்ற நிலையிலே இருப்பது உண்மையென்றே ருஷ்யா ஒப்புக்கொள்கின்றது. ஆனால் அதே சமயம் ருஷ்யா எழுப்பும் பிரதான கேள்வி ஏனைய நாடுகளில் இவை கடத்தப்படவில்லையா? முன்னர்இசுரேல் தென்னாபிரிக்கா பாக்கித்தான் போன்றவை எவ்விதம்அணுக்குண்டுதயாரிக்கும் ஆற்றலையும் அதற்கான அணுப்பிளவுப் பொருட்களையும்பெற்றன? என்பது பெருத்த சங்கடத்தை மேற்குலகிற்கு உருவாக்கிவிடுவதால் இப்போது பெல்ட்சினை சாந்தப்படுத்தும் பணியில் மேற்குலகும் ஈடுபட்டுள்ளது.

### அணுக்குண்டு கிடங்கு

ஆனால் உண்மை நிலை என்ன? எவரையும் திடுக்கிட வைக்கும் இப் புள்ளி விபரம் மேற்குலகாலே வெளியிடப்பட்டவை. சோவியக் சாமிராச்சிய வீழ்ச்சியின் பின்னான நிலைமைகளில் எவ்வளவு அணுப்பிளவை, வெடிப்பை உண்டாக்கும் மூலங்கள் இன்று சோவியத்தின் முன்னைய குடியரசுகளில்பரவிக்கிடக்கின்றன என்பது எவர்க்கும் சரிவரத் தெரியாது. சிலரோ 100-400 தொன் புளுட்டோனியம். 400 - 700 தொன் வரையிலான செறிவான யுரேனியமும் இருப்பதாக கூறுகின்றனர். சிலர் யுரேனியம்1000-ம் தொன் வரை இருப்பதாக கணிக்கின்றனர். இது ஒரு பக்க புள்ளி விபரம். மேற்குலகில் குறிப்பாக அமெரிக்காவில் கைவசமிருப்பது சரிவர வெளியிடப்படவில்லை, எனினும் அடுத்த10 வருடத்துக்குள் 42. 000 (நாற்பத்திரெண்டாயிரம்) அணுக்குண்டுகளை தயாரிக்க தேவையான பொருட்கள் உலகில் இருக்கும்என மதிப்பிடப்படுகின்றது. இப்போது மேற்குலகம் ருஷ்யாவின் விஞ்ஞானிகள் குறித்து பெரிதும் கவலைப்படுவதாக தெரிகின்றது. இவர்கட்கான பலமாற்று வேலை வாய்ப்புத் திட்டங்களை உருவாக்க யப்பான், அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம் போன்றவை திட்டங்களை அறிவிக்கின்றன. அணுவாலைகளின் பாதுகாப்பிற்கு மேலதிக உதவிகளை செய்ய முன் வருகின்றன. ஆனால் இவையெல்லாம் நடைமுறைக்கு எப்போது வரும் என்பது எவருக்குமே தெரியாது.

### ஊருக்கு உபதேசம்

இதற்கிடையில் அண்மைக் காலமாகவே அமெரிக்காவிலிருந்து அணுவாற்றல் ஆய்வுகள் தொடர்பாகவெளிவரும் செய்திகள் பெரும்சினத்தையே இன்று அமெரிக்க மக்களிடமே கிளப்பி விட்டுள்ளது. ருஷ்யாவின் அணு அபாயம் பற்றி பெரிதும் அலட்டிக்கொள்ளும் அமெரிக்க அணுவாற்றல்மையங்கள் நிலை எவ்வாறிருக்கின்றது? அண்மையில் அமெரிக்காவிலே வெளியான தகவல்களின்படி அமெரிக்காவின் பல்வேறு மாநிலங்களிலும் அணுக்குண்டுதயாரிக்கும்தரம் வாய்ந்தபுளுட்டோனியத்தை என்ன செய்வது என்று தெரியாத நிலையில் மிக நீண்டகாலமாக களஞ்சியப்படுத்தப்பட்டிருப்பதாக தெரியாது. அத்தோடு 60இலட்சம் இறாத்தல் கதிர்வீச்சு அபாயமுள்ள அணுக்கழிவுகள் துருப்பிடித்த தொட்டிகளில் தேங்கிக் கிடக்கின்றனவாம். பல தாங்கிகள் 1940களிலே கட்டப்பட்டவை என்றும் இவை துருப்பிடித்து உக்கி கதிர்வீச்சு நீரை கசியவிடும் அபாயம் தோன்றிவிட்டதாக கூறப்படுகின்றது. அத்தோடு 1963ஆம் ஆண்டிலிருந்து 1990-ம் ஆண்டுவரை சோவியத்தோடு செய்யப்பட்ட உடன்பாடொன்றை இரகசியமாக மீறி 204 அணுப்பரிசோதனை வெடிப்புக்களை நிலத்தின் கீழ் நிகழ்த்தியிருப்பதாக தெரிகின்றது.

இவற்றினை விட எல்லோரையும் அதிரச்செய்த செய்தி- 1940களிலிருந்து இற்றைவரை 600 அமெரிக்கர் மேல் (சிறைச்சாலை கைதிகள், நோயாளிகள்) அவர்கட்கு தெரியாமல் கதிர்வீச்சின் விளைவுகளை அறிய 800க்கு மேற்பட்ட பரிசோதனைகள் நிகழ்த்தப்பட்டதாக தெரிகின்றது 4 வயது பிஞ்சுக்குழந்தை கூட இதற்கு தப்பவில்லை. இப்போது இதனால் பலவிதமான அழற்சி, ஒவ்வாமை போன்ற கடும் நோய்கட்குட்பட்டு இவர்கள் வருந்துவதாக தெரிகின்றது. இது இரண்டாம் உலகப் போரில் நாசிகள் செய்ததை ஒத்தது என கடும் கண்டனம் இப்போது தெரிவிக்கப்படுகிறது.

எனவே ஊருக்கு உபதேசிப்பதை விடுத்து உள்நாட்டிலேற்படப் போகும் அபாயத்தை தடுக்க உருப்படியாக நடவடிக்கைகள் எடுக்குமாறு இதே மேற்குலகப் பத்திரிகைகள் அமெரிக்காவிற்கு இடித்துரைக்கின்றன. எனவே பனிப்போரின் பின்னான நிலை கிணறு வெட்டப் பூதம் கிளம்பிய கதையாகிவிட்டது. அமைதிப் பூங்காவாக மாறும் என எதிர்பார்க்கப்பட்டஉலகம் இப்போது அணுக்குண்டுகளை சேமிக்கும் கிடங்காகி விட்டது.

## ஜனாதிபதித் தேர்தல் களம் தயாராகிறது

# பெரு வெற்றிக்கு பொ. ஐ. முன்னணியும் படுதோல்வியைத் தவிர்க்க ஐ.தே.கவும் முயற்சி

பாராளுமன்றப் பொதுத் தேர்தலின் பெறுபேறுகளை ஆராய்ந்து ஒரு தெளிவான நிலையை எய்துவதற்கு இடையில் மற்றுமோரு தேர்தலுக்கு முகம் கொடுக்க வேண்டிய நிலைமை சிறிலங்காவின் அரசியற் கட்சிகளுக்கு வாய்த்துள்ளது. நவம்பர் மாத முடிவுக்கு முன்பாக ஜனாதிபதி தேர்தல் நடத்தப்பட வேண்டிய நிலை ஒருபுறம்; அதிகார நாற்காலியில் அமரும் சந்தர்ப்பம் தற்செயலாக வாய்த்த டி.பி. விஜேதுங்க அதனைத் தக்க வைத்துக் கொள்ளும் திராணியின்றி தள்ளாடுவது மறுபுறம். உட்கட்சிப் பூசலால் ஐ.தே.க. திணறும் சந்தர்ப்பத்தை வகையாகப் பயன்படுத்திக் கொள்ள விளையும் திருமதி சந்திரிகாவின் அரசியல் சாணக்கியம்] இன்னுமொரு புறம். வாக்காளர்கள் மத்தியில் அரசியல் பிரசாரங்கள் மீண்டும் இன்னும் சில வாரங்களில் சூடுபிடிக்கும் என்றே எதிர்பார்க்கலாம். அதே வேளை ஜனாதிபதி ஆட்சி முறையை நீக்குவது தொடர்பான சர்ச்சைகளும்- தேர்தல் முறையையே மாற்றியமைப்பது பற்றிய விவாதங்கள்- தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களின் கட்சி மாறும் உரிமை குறித்து அபிப்பிராயங்கள் எனப் பல விடயங்கள் சிறிலங்காவின் அரசியல் அரங்கில் அலசப்படுகின்றன.

ஜனாதிபதிதேர்தலைப் பொறுத்து ஆளும் பொதுஜன ஐக்கிய முன்னணியின் வெற்றி வாய்ப்பு பிரகாசமானதாக இருப்பதாகவே கருதப்படுகின்றது. நீண்ட கால ஆட்சிக்குப் பின்னர் அதிகாரத்தை இழந்த ஐ. தே. க. உடனடியாக மற்றுமொரு தேர்தலுக்கு முகம் கொடுக்க தயக்கம் தெரிவிக்கிறது. பொது ஜன ஐக்கிய முன்னணிக்கு ஆதரவை வழங்கி அதன் மூலம் ஜனாதிபதி ஆட்சி முறையை ஒழித்து தேர்தல் போட்டியை தவிர்க்க ஐ. தே. க ஆசைப்படுகிறது.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஆட்சி முறையை ஒழிக்க ஐ. தே. க பாராளுமன்றத்தில் ஆதரவு தரும். இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் காமினிதிசாநாயக்காஅறிவித்து இருக்கிறார். ஐ.தே கவின் பொதுச் செயலாளர் டாக்டர் காமினி விஜேசேகராவும் அதனை ஆமோதித்து இருக்கிறார். இதே வேளை ஜனாதிபதி ஆட்சி முறையை ஒழித்து திருமதி சிறிமாவோவை சம்பிரதாய பூர்வ ஜனாதிபதியாக்க திரைமறைவு முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. இவையெல்லாம் ஐ- தே- க தேர்தல் ஒன்றைத் தவிர்க்க முனைவதன் வெளிப்பாடுகள் எனக் கொள்ளலாம்.

மேலும் தேர்தல் ஒன்றுக்கும் முகம் கொடுப்பதை தவிர்ப்பது மூலம் கட்சியில் ஏற்படும் பிளவுகளை தவிர்க்கலாம். கட்சியை ஓரளவுக்கு ஸ்திரப்படுத்திக் கொள்ளலாம். இவை ஐ.தே.க வின் அடிப்படை எண்ணங்களாக இருக்கின்றன. அத்துடன் ஜனாதிபதி ஆட்சி முறையை ஒழித்து பாராளுமன்றத்திற்கு அதிகாரத்தை மாற்றிக் கொண்ட நிலையில் அறுதிப் பெரும்பான்மைக்கு அல்லாடும் சந்திரிகாவின் ஆட்சியை சந்தர்ப்பம் பார்த்து கவிழ்த்து விடுவதன் மூலம் ஆட்சியைக் கைப்பற்றலாம் என்பதும் ஐ தே.கவின் திட்டமாக இருக்கக்கூடும்.

செத்த மாட்டிலிருந்து 'உண்ணி கழருவது போல' ஐ.தேகவுடனான உறவுகளை சிறு கட்சிகள் உதறுகின்றமை இப்போது வெளிப்படை. ஒஸி அபயகுணசேகராவின் சிறிலங்கா மக்கள் கட்சியும், தொண்டமானின் இ.தொ.காவும் பொதுஜன ஐக்கிய முன்னணி அரசின் கருணைக் கடைக்கண் பார்வைக்காக தவம் இருக்கின்றன. அத்துடன் கட்சித் தலைவர் பதவியைக் கைப்பற்ற காமினிதிசாநாயக்கா கையாண்ட வழிமுறைகள் ஐ தே.கவின் மேல் மட்டத்தில் அதிருப்தியையே சம்பாதித்துள்ளது. குறிப்பாக பொதுச் செயலாளர் காமினி விஜேசேகர, முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, திருமதி ஹேமா பிரேமதாசா, கொழும்பு மாநகர முன்னாள் முதல்வர் ரத்னசிறி ராஜபக்ஷா. முன்னாள் அமைச்சர் திருமதி ரேணுகாஹேரத் மற்றும் அநுராபண்டாரநாயக்க, சிறிசேன குரே போன்ற பலரும் காமினியின் நடத்தை தொடர்பாக அதிருப்தியுடன் காணப்படுவதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

வடக்கு,கிழக்கு மாகாணங்களில் தேர்தலில் போட்டியிட்ட தமிழ்க் குழுக்கள் பலவும் ஐ.தே.க ஆட்சியில் இருந்த போது அதன் 'தொங்கு தசைகளாக' விளங்கியவை என்பது தெரிந்ததே. இப்போது அவை அரசை ஆதரித்து நிற்பது ஐ.தே கவிற்கு சங்கடமானது என்பதில் சந்தேகம் இருக்க முடியாது இத்தகையதொரு நிலையில் தேர்தல் ஒன்றுக்கு முகம் கொடுப்பது ஐ.தே கவின் பலவீனமான பக்கத்தை வெளிச்சம் போட்டுக் காட்டிவிடும். இதனை தவிர்க்க பல சந்திப்புக்களும், அந்தரங்க உரையாடல்களும், பேரம் பேசுதல்களும் ஐ. தே. கவில் இடம்பெறுகின்றன. பழையவற்றை மறந்து புதியவற்றை எதிர்கொள்ள தயாராவோம் என்ற முணுமுணுப்பும் இப்போது ஐ.தே.கவில் தெளிவாகவே கேட்கின்றது-

பொது ஜன ஐக்கிய முன்னணியை பொறுத்து ஜனாதிபதி தேர்தல் இப்போது முக்கியமானதாகிறது. பாராளுமன்றத்தில் மயிரிழையில் தொங்கிக் கொண்டிருக்கும் அதிகாரத்தை பலப்படுத்த ஜனாதிபதி தேர்தலின் வெற்றி உதவும் எனவும், ஐ. தே.கவின் தோல்வியைவெளிப்படையாக உணர்த்தும் எனவும், பொதுஜன ஐக்கிய முன்னணி கருதுகிறது. இதனாலேயே தேர்தலைத் தவிர்க்க விரும்பும் ஐ.தே.கவின் எண்ணத்திற்கு இசைவாக நடக்க அரசு மறுப்பு தெரிவிக்கிறது. ஜனாதிபதி ஆட்சி முறையை ஐ ,தே.கவின் ஒத்துழைப்புடன் அகற்றினால் பாராளுமன்றத்தில் அறுதிப் பெரும்பான்மை இல்லாத நிலையில் தமது ஆட்சிக்குஅது அச்சுறுத்தலாகலாம் என்ற எச்சரிக்கை உணர்வு திருமதி சந்திரிகாவிடம் இருப்பதாகவே தெரிகிறது. அதனால் தான் நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி பதவியை பெறுவதும்,பாராளுமன்றத்தில் அறுதிப் பெரும்பான்மையை உறுதிப்படுத்துவதிலும்திருமதி சந்திரிகா அக்கறை கொண்டவராக இருக்கின்றார்.

**இளையவன்**

இதற்காக ஐ தே. கவை சிக்கலுக்குள் இழுத்து பலவீனப்படுத்திவிட அவர் முனைந்து செயற்படுகிறார். முன்னைய ஆட்சியில் நிகழ்ந்த லஞ்ச ஊழல்கள், அதிகார துஷ்பிரயோகம், காணாமற் போனவர்கள் மற்றும் மர்மமாக கொலையுண்டவர்கள் பற்றிய விசாரணைகள் எனப் பலவற்றை கிண்டிக் கிளறி வெளியே கொண்டு வருகின்றார்.

ஆக ஜனாதிபதி தேர்தலில் வெற்றியை உறுதிப்படுத்திக் கொள்ள திருமதி சந்திரிகா விழைவதும்,மோசமான தோல்வியை தடுக்க ஐ. தே. க. பாடுபடுவதுமே இப்போதைய அரசியல்கட்சிகளாக உள்ளன. ஜனாதிபதி தேர்தலில் போட்டி ஐ. தே. க. விற்தும், பொதுஜன ஐக்கிய முன்னணிக்கும் இடையில் தான் இருக்கும் என்பது கண்கூடு. எனினும் தேர்தல் களத்தில் மேலும் நான்கு வேட்பாளர்கள் இடம் பெறும் சாத்தியப்பாடுகளும் இருக்கின்றன.

பொதுத் தேர்தலில் அதிகமான விருப்பு வாக்குகளைக் குவித்த முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரம சிங்காவை ஒதுக்கி ஐ. தே. க. காமினி

(10 ஆம் பக்கம் பார்க்க)

# போர்க் காலத்திலும் சமாதான சூழலிலும் பேருதவி புரியும் ராடர்கள்

இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் நிகழ்ந்த இரண்டாம் உலகப்போர் விஞ்ஞான வளர்ச்சிக்கு ஒரு காரணமாக அமைந்தது. இக் காலகட்டத்தில் பல விஞ்ஞான ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டன. ஜேர்மனியருக்கு எதிராகபோரிடுவதில் பெரும் சிரத்தையை எதிர் நோக்கிய நேசப்படைகள் விஞ்ஞான ஆராய்ச்சிகளூடாக புதிய சாதனங்களைப் படைத்து ஜேர்மனியை வெற்றி கொண்டன. இக் கருவிகளில் ஜேர்மனிய விமானப் படையின் அழிவுக்கும் கடற்படையின் அழிவிற்கும் காரணமாக இருந்தது ராடர் என்றசாதனமாகும்.

ராடர் என்னும் சொல் Radio Detection And Ranging என்பதன் சுருக்கமாகும். இது ஒரு தனிக் கருவியல்ல. பல கருவிகளின் தொகுப்பாக இது அமைகிறது.

ராடர் மிகவும் சுலபமான தத்துவத்தைக் கொண்டு இயங்குகிறது ஒருசுவரின் முன்னால் அல்லது தடுப்பின் முன்னால் நின்று உரத்த ஒலி எழுப்பும் பொழுது எதிரொலி கேட்கிறது. இந்த எதிரொலி கேட்க எடுத்த நேரத்தை வைத்துக் கொண்டு சுவருக்கும் ஒலி எழுப்பியவருக்கும் இடையிலுள்ள தூரத்தைக் கணிப்பிடமுடியும், இவ்வாறே ராடர் சாதனத்திலிருந்து அனுப்பப்படும் மின்காந்த அலைகள் குறித்த ஒரு பொருளில் பட்டு திரும்பி வந்தடைய எடுக்கும் நேரம் துல்லியமாக ராடரினாலேயே கணிப்பிடப்படும். இதனைக் கொண்டு குறிப்பிட்ட பொருள் இருக்கும் தூரத்தை அறிந்து கொள்ளலாம்.

மேலே சொன்ன தத்துவத்தைப் பயன்படுத்தி 'ராடரை' விஞ்ஞானிகள் உரு

**சி. சிவபாலன்**

வாக்க முன்னரே இயற்கையில் வௌவால்கள் ராடர் போன்ற அமைப்பைக் கொண்டிருப்பது அவதானிக்கப்பட்டது. வௌவால்கள் கும் இருட்டிலும் சந்துபொந்தெல்லாம் புகுந்து இரை தேடக் கூடியன. இத்தகைய சக்தி அவற்றிற்கு எவ்வாறு கிடைத்தது என்பதை ஆராய விஞ்ஞானிகள் முற்பட்டனர். அவற்றின் கண்கள் கூடிய சக்தியுடையவையாக இருக்கலாம் எனநம்பிய விஞ்ஞானிகள் சில வௌவால்களைப் பிடித்து கண்களைக் குருடாக்கிய பின் அவற்றைப் பறக்க விட்டனர் ஆனால் அவை பறப்பதில் எவ்வித சிரமத்தையும் அடையவில்லை. பின்னர் அவற்றின் வாயையும் காதையும் அடைத்து பறக்கவிட்ட போது அவை தடுமாற்றம் அடைந்தமை கண்டு பிடிக்கப்பட்டது வௌவால்கள் மிகவும் அதிர்வெண்கூடிய ஒலி அலைகளை எழுப்பும் அலை எதிரேயுள்ள பொருட்களில் பட்டுத் தெறிக்க எடுத்த நேரத்தைத் துல்லியமாக கணித்து அதன்மூலம் பொருட்களை இனம்காண்கின்றன.

இத்தத்துவத்தைப் பயன்படுத்தி முதன்முதலில் ஸோனார் என்னும் கருவி கண்டுபிடிக்கப்பட்டது. இதனைக் கொண்டு கடலின் ஆழம் கண்டுபிடிக்கப்பட்டது. மேலும் கூட்டமாகத் திரியும் மீன்களின் இருப்பிடத்தை அறியவும் நீர்மூழ்கிகளின் நிலையை கண்டுபிடிக்கவும் பயன்படுத்தினர். ஆனால் இக் கருவி மூலம் விரைந்து பறந்து வரும் விமானத்தை கண்டுபிடிக்க முடியவில்லை. மேலும் இக் கருவி ஒலிஅலைகளை அனுப்பி இடைத் தூரத்தை அளக்க பயன்பட்டதால், இவ் அலைகள்காற்று,மழை, பனி, தூசு என்பனவற்றால் பாதிக்கப்பட்டன. எனவே இச் சிக்கல்களைத் தீர்க்க ராடரில் மின்காந்த அலைகள் பயன்படுத்தப்படத் தொடங்கின.

ராடர் சாதனத்திலிருந்து தகுந்த அதிர்வெண்ணில் துடிப்பொன்று [Pulse] அனுப்பப்படும் இது குறிப்பிட்ட பொருளில்பட்டு திருப்பி அனுப்பப்படும் ராடரை வந்தடையும். இதற்கு எடுத்த நேரத்தை மிகத் துல்லியமாக அளவிடுவதன் மூலம் பொருள்கள் இருக்கும் இடத்தினை துல்லியமாக அறிந்து கொள்ள முடியும். மேலும் எதிரொலித்து அனுப்பப்படும் அதிர்வுகள் தொலைக்காட்சி திரையில் தென்படக்கூடியதாகவும் ராடர்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இராண்டம் உலகப்போரின் போது பெரும் நாசம்விளைவித்த ஹிட்லரின் விமானம் படைவிமானங்களை முன்னரே கண்டுபிடித்து அழிக்க வேண்டிய தேவை நேச நாட்டுப் படைகளுக்கு இருந்தது. இதற்கென மேற்கொள்ளப்பட்ட பெரும் ஆராய்ச்சியின் பலனாக 1936 ஆம் ஆண்டில் லண்டன் நகரினதும் தேமஸ் நதியின் கழிமுகத்தினதும் பாதுகாப்பிற்காக 5 பெரிய ராடர் நிலையங்கள் 25 மைல் இடைவெளியில் சங்கிலிபோல் அமைக்கப்பட்டன. இவற்றின் உதவியால் 140 மைல் தொலைவில் 15000 அடி உயரத்தில் பறந்து வரும் விமானங்களையும் துல்லியமாக கண்டுபிடிக்க முடிந்தது. ஆனால் இவை தாழப்பறந்துவந்த விமானங்களைக் கண்டுபிடிக்க உதவவில்லை இதனால் ஜேர்மன் விமானங்கள் தாழப்பறந்து வந்து லண்டனில் பெரும் அழிவுகளை ஏற்படுத்தின.

காலப்போக்கில் விமானங்களில் பொருத்தப்பட்ட ராடர்சாதனம் மூலம் எதிரி விமானங்கள் சுட்டுவீழ்த்தப்பட்டன-

மேலும் கடற்போரிலும் ராடர்கள் உதவி கொண்டு நேசப்படைகள் பல சாதனை புரிந்துள்ளன. ஜேர்மனியின் நீர்மூழ்கிக் கப்பல்களைக் கண்டுபிடித்து அவற்றை அழித்தொழிப்பதற்கு ராடர் பயன்பட்டது

ராடர் மூலம் எதிரிவிமான

(09ஆம் பக்கம் பார்க்க)

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

★ கவிதை

# இளங்கவிஞர்களுக்கான இரு திங்கள் ஏடு

## ஒரு பார்வை!

ஈழத்தில் உள்ள இளங்கவிஞர்களின் ஆற்றல் கவிதை இதழில் நன்கு வெளிப்படுகின்றது.

இரு திங்கள் ஏடாக இந்த கவிதை இதழ் வெளிவருகின்றது. இந்த மண்ணில் இது பெரிய முயற்சி. இதுவரை அறிமுகமில்லாத கவிஞர்கள் பலர் இந்த கவிதை இதழை ஆக்கிரமித்திருப்பது நல்ல அறிகுறியென்றே சொல்ல வேண்டும்.

முற்றிலும் கவிதைக்காகவே இந்தக் 'கவிதை' இதழ் வெளிவருகின்றது. இதுவரை மூன்று இதழ்கள் வெளியிடப்பட்டுள்ளன.

அ. யேசுராசா இக்கவிதை இதழின் ஆசிரியர். புதுக்கவிதை என்கிற நவீன இலக்கியவடிவத்தில் ஆழமான பார்வை இவருக்குண்டு.

ஈழத்தில் புதுக்கவிதையின் வளர்ச்சி உச்சத்தை தொட்டுவிட்டது என்பதில் எவருக்கும் மாற்றுக் கருத்து இருக்க முடியாது.

'இது கவிதையா?' என்று புதுக்கவிதையை இகழ்ந்தவர்கள் கூட அதன் வளர்ச்சியினாலும், ஆழமான கவித்துவ வெளிப்பாட்டாலும் அதன் மீது நேசம் கொள்ள ஆரம்பித்துவிட்டனர்.

போராட்டம் நடைபெறும் மண்ணில் கவிதை ஒரு கத்தியாக...ஒருதுப்பாக்கியாகக்கருதப்படுகின்றது. சில செய்திகளை நாம் கவிதை மூலமே சொல்வது ஆழப்பதியக் கூடியதாகவும் அற்புதமாகவும் உள்ளது.

'மனப் பாதிப்புக்களிலும் மன நெருக்கடிகளிலும் உண்மைக்கலை வேர்கொள்கிறது'.

என்று கவிதையில் முதல் இதழில் உள்ள 'நோக்கு' பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆர்வமுள்ள - ஆற்றல் உள்ள இளங்கவிஞர்களைக் தரமான - காத்திரமான கவிதைகள் படைக்க வைப்பது சாதாரண காரியமல்ல; வெறும் வார்த்தைக் கோலங்கள் 'கவிதை' என்ற பெயரில் பிரசுரிக்கப்படும் நிலையில் கவித்துவம் உள்ள, சமூக நோக்கம் கொண்ட கவிதைகள் படைக்கப்பட வேண்டும்.

தமிழ்நாட்டு கவிஞர்களுடன் ஒப்பிடும்போது, இங்குள்ள எமது கவிஞர்கள் வியாபாரிகள் அல்ல; தமது மனச்சிக்கல்களை - அழுத்தங்களை வெளியிட வேண்டும். தமது எண்ணங்கள் பரவலாக்கப்பட வேண்டும் என்பதற்காகவே படைக்கின்றார்கள்.

> போராட்டம் நடைபெறும் மண்ணில் கவிதை ஒருகத்தியாக... துப்பாக்கியாக கருதப்படுகின்றது.

இக்கவிதை இதழில் கூடுதலான வரை இளங்கவிஞர்களுக்கு இடம் ஒதுக்கப்பட்டிருப்பினும் பிரபலமான - அறியப்பட்ட கவிஞர்களின் படைப்புகளும் பேட்டிகளும், கட்டுரைகளும் இடம்பெறுகின்றன.

'கொடுத்தல் - பெறுதல் ஆகிய செயற்பாடுகளின் நிகழ்களமாக கவிதையின் ஒவ்வோர் இதழும் அமையும் என அதன் முதல் இதழில் சுட்டப்பட்டுள்ளது.

இது சிறப்பானதாகவே படுகின்றது; இளங்கவிஞர்கள் எந்தளவு தூரம் அறியப்பட்டவர்களிடம் ஐக்கியமாகிக் கொள்கின்றார்கள் என்பது ஆராயத்தக்கது.

முதல் இதழில் கருணாகரனுடனான நேர்காணல் பொருத்தப்பாடானதே. இதே சமயம் இரண்டாவது, மூன்றாவது இதழ்களில் நேர்காணல் தந்தவர்களில் 'இலக்கிய சாதனை' பற்றி சிந்திக்க வைக்கின்றது.

இவர்களின் படைப்புக்கள் முதிர்ந்தவையாக இன்னமும் கவனிக்கப்படவில்லை; ஆயினும் வளமான படைப்பைத் தரக்கூடிய கவிஞர்கள் என்பதில் எந்த ஐயுறவிற்கும் இடமில்லை.

தற்காத்து
நீயே தனி
என நிமிர்;
உன் பலம் உணர்...
அகண்ட இப்பிரபஞ்சத்தில்
உனதிருப்புக்கும்
ஓர் அர்த்தம்...
உனதும் ஒரு பங்கு!
மனிதம் சுமந்து நட
வா......
வாழ்வினைப் பாடு!

அழகான கவிதை வரிசை சத்தியபாலன் என்பவர் எழுதிய 'அழைப்பு' என்ற கவிதையின் வரிகளே இவை (ஆனி - ஆடி இதழ்)

இக் கவிதை நெஞ்சில் ஆழப் பதிந்து புதிய உணர்வலைகளை ஏற்படுத்துகின்றன. இதுதான் ''கவிதையின்'' வெற்றி.

இனித் துளிர் விட்டு வளரும் கவிஞர், உறுதியானவர்களாக இந்த மண்ணில் நிரந்தரமாக நிமிர்ந்து நிற்கக் கூடியவர்களாக உருவாக வேண்டும். மானுடத்தை அவர்கள்பாடட்டும் 'கவிதை' இதழ் இந்த மண்ணில் வாசம் பரப்ப வேண்டும். இது இன்றைய தேவை;

வவுனியா திலீபன்

### எழுதப்பட்டது சுயசரிதை அல்ல

### வரலாறு

அப்போதும் கேட்டது........

ஆயிரம் கிரகங்களின்
புதிய பிரசவங்கள்
பூமி
கோடி வருடங்களுக்கு
முன்பிருந்த கோளம்
சூரியன்
குளிர்ந்துபோன
முன்னாள் நட்சத்திரம்
வியாபித்திருந்த வெற்றிடத்திற்கூடாக
நெஞ்சை ஊடுருவிக் கேட்டது
அந்தப் பெயர்.......

திலீபன்.........
யுகங்களின் செல்வன்
மனித மனத்தின்
அறப்பண்பின்
ஆழவேரோடிய விருட்சம்
வரலாற்றைச் செதுக்கிய
சிந்தனைச் சிற்பி
அந்தமில்லாத தியாகத்தின்
அர்த்தமாகிப் போனதால் -
பூமியின் மரணத்தின் பின்னரும்
வாழப் போகின்றவன்,
தியாகத்தின் சுடர்கள்
காலக் குளிர்ச்சியில்
தேய்ந்து விடுவதில்லை
யுகங்களின் மாற்றத்தின் போது
காணாமல் போவது
மனிதர்களின் சுவடுகளேயன்றி
மாவீரர்களின் வரலாறுகளல்ல.

அவனது தியாகத்தின் தகிப்பில்
ஆக்கிரமிப்பின் சின்னங்கள்
அழிக்கப்பட்டன
மரணத்தின் போது
எழுதப்பட்டது
சுயசரிதையல்ல,
இந்தத் தேசத்தின்
புதிய வரலாறு !

சந்திரலிங்கம் கெங்காதரன்
அச்சுவேலி

# மோனாலிஸாவைத் தந்த லியனார்டோ டாவின்சி

ஓவிய உலகில் இன்றும் அற்புதப் படைப்பாக, ஒளிவீசும், அந்தப் பெண்ணின் புன்முறுவலுக்கு ஈடு இணை இல்லை. நான்கு நூற்றாண்டுகளாக அவளது அந்த மோகனப் புன்னகை, எத்தனை பேரை பித்தர்களாக்கியிருக்கிறது. தெரியுமா? விலை பேச முடியாத அந்த கலைப்பொக்கிஷத்தை இந்த உலகிற்கு தந்தவர்தான் லியனார்டோ டாவின்சி.

தனியே ஓவியக் கலைஞராக மட்டுமல்லாது, விஞ்ஞானியாக, சிற்பியாக, பொறியியல் வல்லுனராக, கவிஞராக, உடலியல் மேதையாக, புவியியல் அறிஞராக, கண்டுபிடிப்பாளராக எண்ணற்ற துறைகளிலும் திறமை பெற்றவர் உலகில் அவர் ஒருவராகத்தான் இருக்க முடியும்,

அவர் இயற்கைப் படைப்பின் அதிசயம்தான். ஓவியத் துறையிலும் அறிவியல் துறையிலும் அவர் அழிவில்லாத ஓர் இடத்தைப் பெற்று விட்டார்.

லியனார்டோ டாவின்சி இத்தாலியில் உள்ள ஆன்சினோ என்னும் ஒரு சிறிய நகரத்தில் 1452 ஆம் ஆண்டு ஏப்ரல் 15 ஆம் நாள் பிறந்தார். அவர் தாய், காதரினா என்னும் பெயர் கொண்ட ஒரு நாட்டுப்புறத்துப் பெண்மணி. 'பியரோடி வின்ஸி' என்பவர் அவரது தந்தையார்- சாஸனங்கள் எழுதிக் கொடுப்பவர். தம்முடைய இளமைக் காலத்திலேயே லியானார்டோ, ஓவியத்திலும் அறிவியலிலும் திறமையைக் காட்ட தொடங்கிவிட்டார்.

அவர் பதினைந்தாவது வயதில், பூச்சி புழுக்களையெல்லாம், அவற்றின் இயல்பை அறிவதற்காகச் சேகரிக்கத் தொடங்கினார்.

ஓவியத்தில் நல்ல பயிற்சி பெற அவர் தந்தையார் அவரை மிகச் சிறந்த ஓவியரும் சிற்பியுமான 'அண்ட்ரியா - டெல் - வெர்ரோச்சியோ' என்பவரிடம் அனுப்பி வைத்தார்.

அந்த ஓவியர் லியானார்டோ டாவின் பலவகை ஈடுபாடுகளையும். ஆர்வத்தையும் ஊக்குவித்தார் அதனால்அவர் கூர்ந்து கவனிக்கும் பழக்கத்தையும், தொழில் நுணுக்கத்தையும் பெற்று தம்முடைய அற்புதமான சக்தியை விருத்தி செய்து கொண்டார்.

லியனார்டோ கணித நூல்களைக் கடன் வாங்கிச் சேகரிக்க ஆரம்பித்தார். பிறகு அவற்றைக் கற்பிக்கக் கூடிய ஆசிரியரையும் தேடி அலைந்தார்.

ஓவியக் கூடத்தில் பகல்நேர வேலை முடிந்ததும், மீதி நேரத்தில் வான சாஸ்திரம், தாவர சாஸ்திரம், ஜலசாஸ்திரம், எடை, சலனம் முதலியனவற்றைக் கற்கத் தொடங்கினார்.

அவர் இடக்கைப் பழக்கம் உடையவர். தமது இளமைக் கால பயிற்சிகள் முடிந்தபிறகு அவற்றைப் பற்றியெல்லாம் அவர் குறிப்புகள் எடுக்கத் தொடங்கினார். தம்முடைய கணிப்புகள், குறிப்புகள், பரிசோதனைகள் முதலியவற்றையெல்லாம் அவர் ஒரு ரகசியமான முறையில் பதிவு செய்துவந்தார்.

அந்த எழுத்துக்களை ஒரு முகம் பார்க்கும் கண்ணாடியின் முன் காட்டினால்தான் படிக்க முடியும்! சாதாரணமாக ஒருவர் படித்துவிட முடியாது. அவரிடம் ஒரு பழக்கம் இருந்தது. அதாவது பறவைகளைப் பிடித்து வைத்திருப்பவர்களிடம் அவர்கள் கேட்கும் தொகையைக் கொடுத்து அவற்றை வாங்குவார். பிறகுஅவற்றைப் பறக்க விட்டு மகிழ்ச்சியடைவதுடன் அவை பறக்கிற விதத்தையும் கூர்ந்து கவனிப்பார். இதனால் பறக்கும் இயந்திரம் ஒன்றின் மாதிரியை வரைந்து கொள்ள முடிந்தது.

''ஒரு பறவை, ஒரு பறக்கும் இயந்திரம் போலத்தான். அது இயற்கையின் திட்டப்படியே பறக்கிறது. ஒரு பறவையின் அமைப்பைக் கொண்டு ஒரு பறக்கும் இயந்திரத்தை உருவாக்க முடியும்'' என்பார் அவர்.

வானத்தில், பறக்கும் இயந்திரம் கண்டு பிடிப்பதற்கு 400 ஆண்டுகளுக்கு முன்பே, அதைப் பற்றிய முன்னோட்டமாக அதன் விதிகளைக் கண்டு பிடித்து விட்டார் அவர். இயந்திரத்தைக் கண்டு பிடித்ததாகத் தெரியவில்லை, ஆனால் பறக்கும் இயந்திரத்தைக் கண்டு பிடிப்பதற்கு அவர் காரணமாக இருந்தார் என்பதை விஞ்ஞானிகள் பலரும் ஒத்துக் கொள்கின்றனர்.

கப்பிகளின் அமைப்பையும், பாரம் தூக்கிகளையும் உருவாக்குவதற்கு அவர் தான் முன்னோடி.

நீர்மூழ்கி உடைகளையும், நீருக்கடியில் அமைக்கும் அறையையும் அவர் உருவாக்கினார். மனித உடலியலை ஆராய்ந்த ஹார்வியை விடச் சரியான அமைப்பில் இரத்த ஓட்ட பாதைகளை வரைந்தார்.

1502-இல் அவர் போர்ப் படை எஞ்சினியராக அமர்த்தப்பட்டார். லியனார்டோ ஓவியர்களிடையே ஓர் இளவரசன் மாதிரி இருந்தார் அவரது வாழ்க்கை, ஓவியத்திற்காகவே அர்ப்பணிக்கப்பட்டு விட்டது.

''ஓவியம் என்பது, எண்ணங்களுக்கும் ஆன்மாவுக்கும் ஊட்டமளிப்பதுடன் உடலுக்கும் தெம்பை அளிக்கிறது. ஒருவன் புகழ்பெற்ற மனிதர்களை ஓவியமாகத் தீட்டினால் மட்டும் போதாது; அவனது ஆன்மா வெளிப்படும்படியாக ஓவியம் தீட்ட வேண்டும்'' என்பார் அவர். அவரது 'கடைசி இரவு போசனம்' என்னும் ஓவியம் மிகச்சிறந்த ஒரு கலைப்படைப்பு.

அவர் சொன்னார்; ''மனிதர்களின் அழகெல்லாம் ஒரு நாள் அழிகின்றன. ஆனால், ஓவியத்தில் அந்த அழகு எப்போதும் நிலையாக வாழ்கிறது. ஒரு மௌன கவிதை. கவிதை காட்சியில்லா ஓவியம்.'' மேலும் ''ஓர் உண்மை ஓவியன் தன்னைத் திருப்திப்படுத்திக் கொள்ளவே வரைகிறான்; கூட்டத்தினரைத் திருப்திப்படுத்துவதற்காக அல்ல!'' என்றும் கூறினார்;

தாவர உணவைத்தான் விரும்பிச்சாப்பிட்டார்; மாமிசத்தை அவர் ஒருபோதும் சாப்பிடவில்லை. பிராணிகளைக் கொல்லுவது ஒருமனிதனைக் கொல்லுவது போலத்தான் என்று நினைத்தவர் அவர்;

அவர் திருமணமே செய்து கொள்ளவில்லை அவர் 1519 ஆம் ஆண்டு மே 2 ஆம் நாள் காலமானார்;

தொகுப்பு: க. குணசீலன்

# மத்திய கிழக்கின் வல்லரசாக ஈராக்; மீண்டும் கட்டியெழுப்பும் சதாம் குசெய்ன்

இரண்டாவது உலகப் போருக்குப் பின், மூன்றாண்டுகளுக்கு முன், நாற்பது பகலும் நாற்பது இரவும் நூற்றுக்கணக்கான போர்விமானங்களின் குண்டுத் தாக்குதல்களால் ஈராக் செயலிழந்தது. அதன் இராணுவத் தளங்களும் படைக்கலன் வளங்களும் அதன் மின்சார நிலையங்களும் பாலங்களும் அழிக்கப்பட்டன. பாதுகாப்பு கொண்டிராத குவைத் மீது போர் தொடுத்த ஈராக்கின் பிரதிபலனாக கற்குவியல்கள் நினைவுச் சின்னங்களாயின.

ஆயினும் கடந்த மூன்று ஆண்டுகளில், சதாம் ஈராக்கின் இராணுவ பலத்தை 80% மீளக் கட்டியெழுப்பியுள்ளார் சதாமுக்கு ஆட்சியிலும் பிரதேச ஆக்கிரமிப்பிலும் ஆசை இருக்கிறது அதனால் ஈராக், மத்திய கிழக்கில் செல்வாக்குள்ள இராணுவ வலுவாக வரும் வாய்ப்புண்டு.

வளைகுடாப் போரைத் தொடர்ந்து, ஈராக்கின் இரசாயன உயிரியல், அணுவாயுத, ஏவுகணை படைக்கலங்களின் இருப்பிடங்களை அழிக்க வேண்டும் என ஐ.நா.உத்தரவிட்டது. அதை உறுதிப்படுத்த ஐ நா.விசேட குழுவும் சர்வதேச அணுசக்தி ஏஜென்சியும் சோதனையிடும் நிபந்தனையை ஈராக் ஏற்றுக்கொண்டது. இந்த ஏற்பாடுகள் இருந்தும் சதாம் தன் பலத்தைக் கட்டியெழுப்புவதில் வெற்றி பெற்றுள்ளார்.

இன்று நாற்பதுக்கும் மேலான தொழிற்சாலைகள் டாங்கிகளையும் குறுகிய வீச்சு ஏவுகணைகளையும் பிற படைக்கலன்களையும் உருவாக்கியுள்ளன. 2500 பிரதான சண்டை டாங்கிகளும் (MBT) 250 நிரந்தர இறக்கை விமானங்களும் திருத்தியமைக்கப்பட்டன. இவை வனாந்தரப்புயல் நடவடிக்கையின் போது அழிக்கப்படாமல் தப்பியவை.

இதற்கெல்லாம் பொறுப்பாக இருப்பவர் சதாமின் மருமகன் குசெய்ன் கமல் கசன். வனாந்தரப் புயல் நடவடிக்கைக்கு முன்பும் இவரே ஈராக்கின் அணுவாயுத, இரசாயன, உயிரியல், ஏவுகணை அமைப்புகளுக்குப் பொறுப்பாய் இருந்தவர். சதாமுக்கு வலது கரமான, மற்றொருவர் ஜஃபார் ஈராக் அணுக்குண்டுத்திட்டத்தின் தலைவர். பேர்மிங்காம் பல்கலைக்கழகத்தில் கலாநிதிப் பட்டம் பெற்ற ஜஃபார் பௌதிகவியல் மேதை. அணுவாயுதங்கள் திட்டத்தின் தொழில் நுட்ப, நிருவாகப் பொறுப்பாளர்ராக இருந்தவர் ஆயினும் அப்படி ஒரு திட்டம் இல்லை என்று கூறியவர்.

## இரகசிய ஒப்பந்தங்கள்

சதாமின் ஆயுத மீள் உருவாக்கம் வெளிநாடுகளின் இரகசிய விநியோகம் இல்லாமல் சாத்தியமில்லை. தன் படைக்கலத் தொழில்களுக்குத் தேவையான முக்கிய பொருள்களையும் உதிரிப்பாகங்களையும் ஐக்கிய இராச்சியம், சுவிற்சலாந்து, ஒஸ்ரியா, பிரான்ஸ், ஜேர்மனி ஆகிய இடங்களிலிருந்து பெறுவதில் வெற்றிபெற்றது என்கிறார். நியூயோர்க்கில் உள்ள ஆய்வாளர் யூல்ஸ்குரோல்.

எண்ணெய் உற்பத்தி செயலிழந்த பின் இவற்றை வாங்குவதற்கு சதாமிற்குப் பணம் எப்படி வந்தது? 1979-ல் ஜனாதிபதியான காலத்திலிருந்தே ஈராக்கின் எண்ணெய் மூலம் கிடைத்த 31 பில்லியன் டொலர் பணம் போர் நிதிக்காக ஒதுக்கப்பட்டிருந்தது வனாந்தரப் புயல் நடவடிக்கையின் போதும் அதன் பின்னரும் பல பில்லியன் ஜோர்தானுக்கு கைமாறின. ஜோர்தான், பின்னர் இராணுவ தளபாட விநியோகம் உட்பட எல்லா வர்த்தகங்களுக்கும் ஈராக்கின் வர்த்தக மையமாகமாறியது. அத்துடன் ஈராக்கின் அரசாங்க நிதியை வர்த்தக வங்கிகள் ஊடாக சுவிற்சலாந்துக்கு அனுப்பி வைத்தது.

மேற்கு நாடுகள் சதாமின் ஆயுத மீளமைப்புக்குப் பெரிதும் உதவின. எண்பதுகளில் சோவியத் ஒன்றியத்துக்குப் பதில் பிரான்ஸ் உதவியது. ஏவுகணைகள், குண்டுகள் ரேடார் கருவிகள் ஆகியவற்றை விநியோகித்தது. ஈராக்கிடம் இருக்கும் பிரெஞ்சு தயாரிப்பான சண்டை-குண்டு வீச்சு விமானங்களுக்கு உதிரிப்பாகங்களைமீளவழங்க ஐரோப்பாவிலுள்ள ஈராக் முகவர்களுக்கும் பிரெஞ்சு ஆயுத ஏற்றுமதிக் கம்பனிக்கும் இடையில் சமீபத்தில் ஒப்பந்தம் ஒன்று உருவாகியிருப்பதாக தெரிகிறது. ஸ்கட் ஏவுகணைகளை தரமுயர்த்த சில ஜேர்மன் கம்பனிகள் உதவுகின்றன. அணுவாயுத தொழில் நுட்பங்களையும் விற்பனை செய்கின்றன,

## சதாமின் வாய்ப்பு

1991 செப்டம்பரில் ஐ நா. விசேட குழு, பக்தாத்தில் அணுவாயுதங்கள் தொடர்பான ஆவணங்கள் நிறைந்த ஒரு கட்டடத்தை சோதனையிட்டது அக்குழுவினரை விருந்தாளிகளாக நான்கு நாட்கள் வைத்திருந்த ஈராக்கியர் 70000பக்கங்கள் வரையான பத்திரங்களுடன் போக அனுமதித்தனர். இவற்றுள் அணுவாயுத, ஏவுகணைத் திட்டங்கள் அடங்கியிருந்தன: மேற்குலகினர் முன்னர் கணிப்பிட்டதை விட ஈராக்கியர் 18—30 மாதங்கள் பல சாதனைகளில்முன்னேறிவிட்டதை அந்த ஆவணங்கள் காட்டின

இன்று சதாமின் முழு ஆயுத அமைப்பையும் அழித்துவிட்டதாக ஐ.நா விசேட குழு நம்பும் வேளை அது முற்றிலும் சரியல்ல என்பதையும் ஒப்புக்கொள்கின்றது. அமெரிக்க உளவாளிகள் இன்னும் ஈராக்கில் அணுத்திட்ட ஆவணங்களைத் தேடிக்கொண்டிருக்கின்றனர்.

அதேவேளை ஈராக்கின் அணுசக்தியல்லாத நவீன ஆயுதங்களில் பெருமளவு அழியாமல் தப்பிப் பிழைத்தன. 1992-ல் அங்கு 605 வகை இயந்திர ஆயுதங்கள் - அவை ஐக்கிய இராச்சியம், ஜேர்மனி, சுவிற்சலாந்து நாடுகளில் பெறப்பட்டவை - இருந்தன அவற்றில் 66 மட்டும் அழிக்கப்பட்டன. மரபுவழி ஆயுதங்கள் தயாரிக்கும் தொழிற்சாலைகள் எதையும் அழிக்கும்படி ஐ நா நிபந்தனை எதுவும் விதிக்கவில்லை. ஆகவே ஈராக், தான் விரும்பியவை மரபுவழிஆயுதங்கள் தயாரிக்க அனுமதிக்கப்பட்டது.

ஈராக்கிடம் இப்பொழுது உயிரியல் -போராயுத கிடங்குகளும் உள்ளன என்று இராணுவ வல்லுநர்கள் நம்புகிறார்கள். பொருளாதாரத் தடையும் சோதனைகளும் இருப்பினும் அங்கு தயாராகும் உயிரியல் ஆயுதங்களை யாரும் கண்டுகொள்ள முடியாது.

## ஏவுகணைகள்

வனாந்தரப் புயல் நடவடிக்கையை அவதானித்தவர்கள் ஈராக்கின் ஸ்கட் ஏவுகணைகளை மறந்துவிட முடியாது, சாட் 16(Saad 16) ஏவுகணைகள் ஆராய்ச்சி, அபிவிருத்தி தொழிற்சாலை மீண்டும் செயல்படுகிறது. அது 150 கி. மீ. தூரம் செல்லும் இது ஐ. நா. நிபந்தனைக்கு உட்படாதது. நீண்ட தூரவீச்சு ஏவுகணைகள் (Long-range) உற்பத்தி தடுக்கப்பட்டது. எனினும் குறுகிய தூரவீச்சு ஏவுகணைகளால் குவைத்தையும், சவூதி அரேபியாவையும் தாக்க முடியும். 900 கி. மீ. செல்லக்கூடிய ஸ்கட்கள் ஈராக்கிடம் உண்டு என்று மேற்குலக உளவாளிகள் கூறுகின்றனர்.

வனாந்தரப் புயல் நடவடிக்கையால் (Desert storm) கலங்கிப் போயிருந்த சதாம் குசேய்ன் மீண்டும் மேற்கின் உதவியுடன் தன் இராணுவ இயந்திரத்தை மேம்படுத்தி வருகிறார்.

எஸ். பி. கே.

நன்றி:
றீடேர்ஸ் டைஜெஸ்ற்-யூன் 94


★★★★★ போட்டோ அல்பம் இனாம் ★★★★★

- கலர் பிலிம் சுருள்களை கழுவி படமாக்கி 30 பிரதிகள் பெற்றால் ஒரு போட்டோ அல்பம் இனாம்.
- போட்டோ பிளேற் (PHOTO PLATE) கலர் படங்களை கோப்பைகளில் பதித்தல். (சாம்பிள் பார்வையிடலாம்)
- கொம்யூட்டர் றபர் சீல் (COMPUTER RUBBER STAMPS) (இரண்டு வருட உத்தரவாதம்)
- லயின், காவ்ரோன், கலர் புளொக்ஸ் (Line, Half Tone, Colour Blocks)
- புகைப்பட பிரதியாக்கம் (RE-COPY) மேல் குறிப்பிட்டவற்றைக் குறைந்த செலவில் குறுகிய காலத்தில் பெற்றுக்கொள்ள நாடுங்கள்,

★ கொழும்பு கலைக்கூடம் ★

(கொழும்பு ஸ்ருடியோ)

55, லெப். இளங்கோ வீதி, யாழ்ப்பாணம்.

தொழில்நுட்பத்தில் 35 வருடங்கள் அனுபவம் பெற்றவர்கள்

(சி-10219)



யாழ். நகரத்தில் உங்களை அழைக்கிறது

வான்புகழ்

மின்வளம்

சலுகைகள் ஏராளம்! உங்களுக்கும் வேண்டுமா?

குறைந்த செலவில் உங்களுக்குத் தேவையான

- ★ சகல விதமான கைக்கடிகார வகைகள்
- ★ தொலைக்காட்சிப் பெட்டிகள்
- ★ வீடியோ டெக், வீடியோ ஹெட்
- ★ பொக்கற் ரேடியோ, பிலிம் ரோல்கள்

மற்றும்

- சார்ஜர் பற்றரிகள்
- மணிக்கூட்டு பற்றரிகள்
- இன்னும் பலவகை இலத்திரனியல் பொருட்கள்

இவையாவும் ஒரே இடத்தில் நீங்கள் இன்றே பெற்றிடலாம்!

★ மின்வளம் ★

இல. 81, சந்தோசம் தெரு, (கஸ்தூரியார் வீதி)
யாழ்ப்பாணம்.

குறிப்பு:- அண்மையில் வெளியீடு செய்யப்பட்ட "கடலிலே காவியம் படைப்போம்" ஒலிப்பதிவு நாடா மொத்தமாகவும், சில்லறையாகவும் விற்பனைசெய்யப்படுகின்றது.

(சி-10341)

யாழ்ப்பாணம் நல்லூர் [illegible]

# அமெரிக்காவின் நலனுக்காக எதையும் செய்யும் சி. ஐ. ஏ.

உலகில் நடைபெறும், பெரும்பாலான ஆட்சிக் கவிழ்ப்புகளுக்கும் சதிப்புரட்சிகளுக்கும் அமெரிக்க உளவு நிறுவனமான சி-ஐ ஏ-எப்படியாவது தொடர்பைக் கொண்டிருக்கும் என கூறப்படுவதுண்டு. இது ஒரு வகையில் சி-ஐ-ஏ யின் அடாவடிகளுக்கு எடுத்துக்காட்டாக இருக்கும் போது, இன்னொரு வகையில் சி-ஐ-ஏயின் செயல் திறனையும் காட்டுவதாக அவதானிகள் கூறுவர்

அமெரிக்காவின் உள்நாட்டுப் பாதுகாப்பைகண்காணிக்கும் FBI (Federal Bureau of Investigation) அமைப்புக்கு உதவிபுரிவதற்காக 1947 ஆம் ஆண்டில் CIA (Central Intelligence Agency) உருவாக்கப்பட்டது. எனினும் காலப்போக்கில் சி.ஐ ஏயின் பிரதான வேலையாக வெளிநாடுகளில் உளவு பார்ப்பதும், அதனோடிணைந்த செயல்பாடுகளில் ஈடுபடுவதும் அமைந்துவிட்டது.

ஆண்டொன்றுக்கு இருபதினாயிரம் மில்லியன் டொலர்களுக்கும் அதிகமாக சி.ஐ . ஏ தன் செற்பாடுகளுக்காகசெலவழிக்கின்றது தனியே உளவு பார்ப்பதை தொழிலாக கொண்டவர்களை மட்டுமன்றி இராஜதந்திரிகள், விஞ்ஞானிகள், தொழிநுட்ப நிபுணர்கள், மொழி வல்லுநர்கள், பொருளாதார சிந்தனையாளர்கள் எனப் பலதரப்பட்டவர்களும் சி.ஐ.ஏயில் பணியாற்றுகின்றனர். அல்லது பணியாற்ற வைக்கப்படுகின்றனர்.

சர்வதேச ரீதியில் அமெரிக்காவின் நலனுக்குச் சாதகமான நிலைக்காக எந்த ஒரு சவாலையும் சி.ஐ.ஏ சந்திக்க தயாராகவுள்ளதாக அதன் பிரதான கோட்பாடு உறுதியாக கூறுகின்றது- இதற்காக நாடுகளின் தலைவர்களைக் கூட சி ஐ ஏ கொலை செய்துள்ளது சிலி நாட்டின் அதிபராக இருந்த சால்வடோர் அலண்டோ கொலையில் சி-ஐ-ஏயின் பங்கு பகிரங்கமாகவே நிரூபிக்கப்பட்டது- இதனைவிட ஏராளமான ஆசியக் கொலைகளில் சி-ஐ-ஏ தன் மறைமுக ஆதரவை வழங்கி வந்துள்ளது

அமெரிக்காவின்நெடுங்கால எதிரியான கியூபா ஜனாதிபதி பிடல் காஸ்ரோவைஒழித்துக் கட்டுவதில் சி-ஐ-ஏ பல முறை களத்தில் இறங்கியது 1960ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் சபையின் உயர்கூட்டமொன்றில் கலந்து கொள்வதற்காக நியூயோர்க் வந்திருந்தார் பிடல் காஸ்ரோ சுருட்டுப் புகைப்பதில் மிகுந்த ஆர்வம் கொண்ட பிடல் காஸ்ரோவைஒரு சுருட்டின் மூலமே கொலை செய்யத் திட்டம் தீட்டியது சி ஐ.ஏ. காஸ்ரோவுக்குவழங்கப்படும், விசேடமான சுருட்டுப் பெட்டியில் வெடிகுண்டைப் பொருத்துவதன் மூலம் சி.ஐ.ஏ. தன் திட்டத்தை நடைமுறைப்படுத்த முயன்றது. இந்த விடயம், அமெரிக்காவின் உயர் தலைவர்களுக்கு தெரிய வந்ததால், அமெரிக்காவுக்கு ஏற்பட இருந்த பெரிய அபகீர்த்தி தடுத்து நிறுத்தப்பட்டது. நியூயோர்க் நகரில், ஒரு வெளி நாட்டுத் தலைவருக்குக்கூட அமெரிக்காவினால் பாதுகாப்புவழங்க முடியவில்லை என்ற குற்றச் சாட்டு எழலாம் என்ற எண்ணமே இதற்கு காரணமாகும்.

இந்த சந்தர்ப்பத்தை விட கியூபாவில்வைத்தேகாஸ்ரோவைக் கொல்ல பல முறை சி ஐ.ஏ. முயன்றது பயங்கர நோய்களை உண்டாக்க கூடிய கிருமிகளை ரகசியமாக காஸ்ரோவின்உடலில் செலுத்தவும் முயற்சிகள் எடுக்கப் பட்டன

சோவியத் ரஷ்யாவின் தலைவராயிருந்த பிரஷ்னேவ் சி ஐ.ஏ யின் எதிரிகள் பட்டியலில் முதலிடத்தை வகித்தவராவார். இவரது மரணம் எப்போது சம்பவிக்கும் என்பதில் சி ஐ.ஏ. குறியாயிருந்தது நேரடியாக பிரஷ்னேவை கொலை செய்யும் முயற்சிகளுக்கு ரஷ்யாவின் உளவு நிறுவனமான கே ஜி பி மிகப் பெருந் தடையாக இருந்து வந்தது. எனவே, பிரஷ்னேவ் இயற்கையாகவேனும் மரணமெய்துவதை சி.ஐ.ஏ எதிர்பார்த்ததில் வியப்பில்லை

பிரஷ்னேவ், நீண்டகாலமாக நோய்வாய்ப்பட்டிருப்பதாக தகவலறிந்த சி-ஐ-ஏ அதனை உறுதி செய்ய முயன்றது. கிரெம்ளினிலிருந்து பிரஷ்னேவின் சிறுநீரை பெருந்தொகையான செலவில், அமெரிக்காவுக்குள் கடத்தி வந்து, பரிசோதனைகள் செய்து, பிரஷ்னேவ், பாரிய நோய் வாய்ப்பட்டிருப்பதை உறுதி செய்தது ஆனால் சி. ஐ-ஏ-க்கு கிடைத்தது பிரஷ்னேவுடையதல்ல என்பது வெகு காலத்திற்கு பின்பே சி-ஐ-ஏ க்கு தெரிய வந்தது.

சி-ஐ-ஏ- தன் செபற்பாடுகளுக்கு அமெரிக்க பல்கலைக் கழகங்களையும் தளங்களாக பாவித்து வருகின்றது. ஹாவார்ட் மற்றும் மசாசூட்ஸ் பல்கலைக்கழகங்களின் பேராசிரியர்கள் கூட சி ஐ ஏயின் ஏஜண்டுகளாகியுள்ளனர். பனிப்போர் காலத்தில் அமெரிக்காவினுள் கம்யூனிச சிந்தாந்தங்களை பரப்புவோரை கண்டுபிடிக்க, தேசிய மாணவர் கழகம் என்ற அமைப்பு மூலமும் சி ஐ.ஏ தொழிற்பட்டது.

சி ஐ ஏ யின் கரங்கள் இந்தியாவில் கூட அரசியலில் குழப்பத்தை உண்டு பண்ணியிருந்தன 77இலிருந்து இந்திரா காங்கிரஸ் ஆட்சி கவிழ்ந்து எதிர்க்கட்சிகளின் ஆட்சியில் இந்தியா இருந்த போது பிரதமராக இருந்த மொளார்ஜி தேசாய் கூட சி ஐ ஏ யின் ஏஜண்ட் என குற்றஞ் சாட்டப்பட்டார். அவரது அமைச்சரவையின் முடிவுகள், இரண்டு மணிநேர இடைவெளியில், சி ஐ ஏ தலைமையகத்தில் அலசப்படுவதாகவும்கூறப்படுவதுண்டு.

அண்மைக் காலத்தில் சி ஐ ஏ யின் முக்கிய இலக்காக இருந்தவர் ஈராக் அதிபர் சதாம் உசைன் வளைகுடாப் போரைத் தொடர்ந்து சதாம் உசைனைக் கொலை செய்வதற்காக பல்வேறு வழிகளில் சி. ஐ.ஏமுயன்றது இதற்குஅப் போதைய அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் புஷ்சின் ஓரளவு வெளிப்படையான அங்கீகாரமும் இருந்தது, இதற்கென கோடிக்கணக்கான டாலரை சி ஐ ஏ தனதுபட்ஜெட்டில் ஒதுக்கியும் வந்தது.

சி ஐ ஏ தனது திட்டங்களை வருடக்கணக்கில் கூட எதிர்வு கூறி அமைத்ததுண்டு. தனது நட்பு நாடுகளான பிரிட்டன், மற்றும் ஐரோப்பிய நாடுகளிலும் சி ஐ ஏ தீவிரமாக செயற்பட்டது- மூன்றாம் உலக நாடுகளில் சி ஐ ஏ தனது பிடியை வலுப்படுத்தும் நடவடிக்கைகளில் இன்றும் இறங்கி வருவதையும் காணக்கூடியதாயுள்ளது.

உலகளாவிய ரீதியில் இயங்கும் பல பொது அமைப்புக்களையும், தொண்டர் ஸ்தாபனங்களையும் சி ஐ ஏ விட்டு வைக்கவில்லை. நிதியுதவிகளை அளிப்பதன் ஊடாக அவற்றின் மூலமாகவும் தனது செயற்பாடுகளை சி. ஐ. ஏ. மேற்கொண்டு வருகிறது.

தனியே இராணுவ, அரசியல் ரீதியாக மட்டுமல்லாது உள ரீதியாகவும், மூன்றாம் மண்டல நாடுகளை தன் பிடிக்குள் வைத்திருக்க சி. ஐ. ஏ. எடுத்துவந்த நடவடிக்கைகள் பலவும் இன்று வெட்ட வெளிச்சமாயுள்ளன. தனக்கு சார்பான பிரசார நோக்கில், நவீன வசதிகள் கொண்ட தகவல் தொடர்பையும் இதற்கு சி. ஐ. ஏ பயன்படுத்தி வந்துள்ளது இப்போது தெரிய வந்துள்ளது.

இவற்றினடிப்படையில் அமெரிக்காவின் உயர்பீடத்தின், கொள்கை வகுப்பிலும் தீர்மானங்களிலும், சி ஐ ஏ யின் ஊடுருவல் இருப்பதும் தவிர்க்க முடியாததாகிவிட்டது.

கே.ஜி.பி யின் வலுவிழப்பும், சி ஐ ஏ யை தனியொரு கையோங்கிய உளவு நிறுவனமாக்கியிருக்கிறது.

தொகுப்பு:

**ரகுராம்**

## உளவளம்

பதில்:- ஆசிரியர் பற்றாக்குறையே பெரும் குறையாகவுள்ளது. இங்கு எங்களுடன் சேர்த்து 14 பேர் உள்ளோம். ஐந்து மாணவருக்கு ஒரு ஆசிரியர் தேவைப்படுகிறார். கற்பிக்க வரும் ஆசிரியர்கள் அகதிமுகாம்களில் இருந்தே வருகிறார்கள். இவர்களும் பொருளாதார நிலையில் மிகவும் பின் தங்கியவர்களாகவேயுள்ளனர். இவர்களுக்குப் பயிற்சி வழங்கவும் தற்போது முடியாதுள்ளது. கடந்த வருடம் பயிற்சி பெற கொழும்பு சென்ற இரு அருட்சகோதரிகள் திரும்பி வந்து விட்டனர். அங்கு சிங்களத்தில் மட்டுமே பயிற்சி அளிக்கப்படும் என அவர்கள் கூறி திருப்பிவிட்டனர், இங்கு இத்தகைய சிறார்களுக்கு சேவை மனப்பாங்குடன் அன்பு, பாசம், கருணை காட்டி சேவையாற்றக்கூடியவர்களே தேவை. அத்துடன் இச்சிறார்கள் தாமாக சிந்தித்து செயற்படமாட்டார்கள் எதையாவது காட்டிக் கொடுத்தால் மட்டும் தான் செய்வார்கள். சில நேரங் கழித்து மறந்தும் விடுவார்கள். அதற்கு ஏற்ப பொறுமையாகஇருந்துசெயலாற்றக் கூடியவர்கள் தேவை- நாம் எமது பணியை இவர்களுக்காகவே முழுமையாக ஒப்படைத்து விட்டோம்.

கேள்வி; மனநிறைவு ஏற்பட்ட சம்பவம் ஏதாவது நிகழ்ந்துள்ளதா?

பதில்;- நிறையவுள்ளது. ஓர் சிறுமி நன்றாக டான்ஸ் ஆடுவா பழக்குகிறோம் இன்னொரு சிறுவன் நன்றாக 'றம்ஸ்' அடிப்பான் இன்னுமொருவர் மிருதங்கம் அடிப்பார் இவர்களே இங்கு நடக்கும் நிகழ்ச்சிகளுக்கு எல்லாம்செய்வார்கள் பலருடைய பராட்டையும் பெற்றிருக்கிறார்கள்

சிறுவன் ஒருவர் மிருதங்கம் வாசிப்பார் அவரை மேலும் வளர்க்கவிரும்பி ஓர் மிருதங்க ஆசிரியரை நாடினோம் அவர் சிறுவன் மிருதங்கம் வாசித்ததை கண்டு வியப்படைந்தார் அனுபவமே இல்லாத சிறுவன் மிகவும் திறமையாவே வாசிக்கிறார் அதில் எதுவித தாளலயம் கூட பிழைக்கவில்லை. அவரை அப்படியே விட்டுவிடுங்கள் எனக்கூறி சிறுவனையும் வாழ்த்திச் சொன்றார். இதேபோல ஓர் சிறுமி தந்தையை கண்டதும் அப்பா என அழைத்தார் இதுவரை பேசாத தன் குழந்தை பேசிவிட்டதைக்கண்ட தந்தைபட்ட இன்பத்தை வர்ணிக்க வார்த்தைகளே கிடையாது என கூறினார் நா தளதளக்க,

## மின்சாரத்தை உற்பத்தி செய்யும் மீன்கள்

அமேசன் நதிக்கரையிலுள்ள சேற்றிலும், அமெரிக்காவிலுள்ள ஒறினோக்கோ (Orinoco) ஆற்றுப் பள்ளத்தாக்குகளிலும் காணப்படும் கறுப்பு நிற ஒரு வகை விலாங்கு மீன்கள் (Eels) எதிரிகளிடமிருந்து தம்மைக் காப்பாற்றிக் கொள்வதற்காகவும், இரைகளைக் கௌவ்விக் கொள்வதற்காகவும் தனது வாலின் கீழ்ப் பகுதியில் ஒருவகை மின்சாரத்தை உற்பத்தி செய்கின்றன- இந்த மின்சாரம் 400v இலிருந்து 650v அழுத்த வேறுபாட்டையுடையவையாக இருப்பதுடன் 1 அம்பியர் மின்னோட்டம் கொண்டதாகவும் இருக்கின்றது- இந்த மீன்கள் 1.8m நீளம் வரை வளரக் கூடியதாக இருக்கின்றன- இவற்றை மின்சார விலாங்கு அல்லது பிறேசிலியன் மின்சார விலாங்கு (Brazillion Electric Eels) என்றும் அழைக்கப்படும்-

அமெரிக்க ஆறுகளில் காணப்படும் (Catfish) என்னும் மீன்களும் மின்சாரத்தை உற்பத்தி செய்கின்றன- இவை 1.2m நீளம் வரை வளரக் கூடியவையாகும்-

**Tropedo Ray** என்று அழைக்கப்படும் வெப்பக் கடலில் வாழும் இன்னொரு வகை மீனும் அத்திலாந்திக் சமுத்திரத்தில் காணப்படுகின்றது- இவை 1.5மீ வரை வளரக் கூடியவை- 90 கிலோ வரை நிறையுடையவை- மேல் பகுதி கறுப்பாகவும், கீழ்ப்பகுதி ஒளிர்வாகவும் (Light Coloured) காணப்படும்- சாப்பிடக் கூடிய இந்த மீனினம் தன் தலைக்கும் செதில் களுக்குமிடையில் மின் உற்பத்தியாக்கியைக் கொண்டிருக்கின்றன-

இம்மீனினம் மின்சாரத்தை வழங்கியபின் உணவை உட்கொண்டு ஓய்வெடுப்பதன் மூலம் வழங்கிய மின்சாரத்தை ஈடுசெய்து கொள்ளும்-

## போர்க்கால

த்தையும் சொந்த விமானத்தையும் கண்டுபிடிக்கக்கூடிய அமைப்பொன்றும் காலப் போக்கில் ஏற்படுத்தப்பட்டது. இவ்வாறு இனம்பிரித்துக் காண்பதற்கு சொந்த விமானங்களில் குறிப்பிட்ட அதிர்வெண் கொண்ட அலையை பிறப்பிக்கும் கருவி ஒன்று பொருத்தப்பட்டிருக்கும் ராடரில் இருந்து அனுப்பப் படும் மின்காந்த அலையில் இவ் அலைபட்டதும் புதிய அதிர்வெண் கொண்ட அலை தோற்றம் பெறுகிறது இதனால் ராடர் திரையில் வித்தியாசமான தோற்றம் ஒன்று ஏற்படுகிறது இதன் மூலம் சொந்த விமானங்களை அடையாளம்காணமுடிகிறது.

ராடரிலிருந்து அனுப்பப்படும் மின் காந்த அலைகளை ஏற்று பதில் அனுப்பக்கூடிய அமைப்புகளும் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன.

மேலும் ராடரில் எதிரி விமானமோஅல்லது கப்பலோ தென்படும்போது தானாக இயங்கி தாக்குதல் நடத்தக் கூடிய அமைப்புகளும் ராடரில் பொருத்தப்பட்டுள்ளன. ஏவுகணைகளை எதிர் கொண்டு அழிக்கக் கூடிய அமைப்புக்களையும் ராடர்கள் கொண்டுள்ளன.

எதிரியின் நாட்டிற்குள்''பரசூட்'' மூலம் துருப்புகளை இறக்குவதற்கு ராடர்கள் துணைபுரிகின்றன- முதலில் ஒரு சிறுபடை ராடருக்கு மின்காந்த அலைகளை அனுப்பக் கூடிய சிறிய சாதனத்துடன் எதிரிகளின் நாட்டில் உட்பிரவேசிக்கின்றது- பின்னர் பாதுகாப்பான இடத்தைக் கண்டுபிடித்து அங்கிருந்து மின்காந்த அலைகள் அனுப்பப்படுகின்றது. அதனை கிரகித்துக் கொள்ளும் ராடரின் உதவியுடன் மேலதிக படையினர் எதிரி நாட்டிற்குள் பாதுகாப்பான இடத்தில் பரசூட் உதவியுடன் இறக்கப்படுகின்றனர்.

இதேவேளை ராடரை ஏமாற்றி அவற்றிலிருந்து தப்பிக் கொள்ளவும் பல வழிகள் பின்பற்றப்படுகின்றன. எதிரி நாட்டினர் பயன்படுத்தும் அதே அதிர்வெண்ணுடைய மின் காந்த அலைகளை அனுப்பி ராடரின் செயற்பாட்டை குழப்பலாம். மேலும் எதிரி நாட்டின் மீது பறக்கும் விமானங்களில் இருந்து உலோகத் தகடுகளை வெளியே வீசும் போது அவற்றில் ராடரில் இருந்து வரும் மின்காந்த அலைகள் பட்டுத் தெறிப்பதினால், விமானம் எது? உலோகத் தகடுகள்எது? என்பதை கண்டு பிடிப்பதில் ராடர் தோல்வி அடைகிறது. ராடர்கள் போரின் போது பல்வேறு வழிகளில் துணை புரிவது போலவே சமாதான காலத்திலும் பலவகைகளிலும் துணை புரிகிறது. ராடர்கள் போக்குவரத்து விமானங்களின் நகர்வுகள் கப்பல்களின் நகர்வுகள் என்பவற்றை கட்டுப்படுத்த மிகவும் துணையாக உள்ளன.

# 3 ஆம் ஆண்டு நினைவாக



பிறப்பு:

25 - 08 - 1976

வீரச்சாவு:

16 - 09 - 1991

## வீரவேங்கை கல்கத்

(மார்க்கண்டு மதனரூபன்)

(யாழ்- மத்திய கல்லூரி மாணவன்)

ஆண்டுகள் மூன்றாகினும் ஆறிடுமோஎம் இதயம்
தமிழர்களின் தாகமது தமிழீழமதை மீட்கவென
வரலாறு காணும் மணலாறு மண்ணதிலே
உம்மோடு உரமான மாவீரர்களின் நினைவை
எம் நெஞ்சோடு சுமக்கின்றோம்.

புத்தூர் கிழக்கு,
புத்தூர்.

-குடும்பத்தினர்

(9404)

## 2-ம் லெப். மாலதி

நினைவார்த்த கட்டுரைப் போட்டி

விபரங்களை 1994 09-09 ஈழநாதத்தில் பார்க்கவும்.

(சி-10340)

## "லிகிதர் பதவிக்கு - பயிலுநர்கள் தேவை"

(ஆண், பெண் இருபாலாருர்)

மேற்படி பதவிகளுக்கு பயிலுநர்கள் தேவை. விண்ணப்பிக்க விரும்புவோர் சங்கத்தில் விண்ணப்பப்படிவங்களை ரூபா 10/- செலுத்தி, பெற்று விண்ணப்பிக்க வேண்டும். பயிற்சிக் காலம் ஒரு வருடமாகும். இக் காலத்திற்கு நாள் ஒன்றுக்கு ரூபா 70/- (எல்லாம் உட்பட) படியாக வழங்கப்படும். விண்ணப்பங்கள் 29-09-94 பி. ப. 5 00 மணிக்கு பிந்தாமல் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்க வேண்டும்.

**தகைமைகள்:**

அ. கூட்டுறவுப் பயிற்சி (சாதாரண பிரிவு) சித்தியடைந்திருக்க வேண்டும்
ஆ. வயது: 22 — 40

பொது முகாமையாளர்

வலி கிழக்கு வ.ப.பல. நோக்குக் கூட்டுறவுச் சங்கம்,
அச்சுவேலி

(சி-10342)

## பெருவெற்றி

திசாநாயக்காவை வேட்பாளராக்கினால் தானும் ஜனாதிபதி தேர்தல் களத்தில் வேட்பாளராகக் குதிக்க நேரும் என்று சிறிலங்கா மக்கள் கட்சியின் தலைவர் ஒஸி அபயகுணசேகராஎச்சரிக்கை விடுத்துள்ளார். அதாவது அடுத்த ஜனாதிபதியாகரணில் தெரிவு செய்யப்படாவிட்டாலும் பரவாயில்லை. காமினி திசாநாயக்கா தெரிவு செய்யப்பட்டு விடக் கூடாது என்பதில் விஜேகுமாரதுங்காவின் நெருங்கிய சகாவான ஒஸி அபயகுணசேகரா அக்கறை கொண்டிருக்கிறார் எனலாம்

மேலும் ஜே. வி. பி யின் மத்தியகுழு உறுப்பினர்களில் ஒருவர் எனச் சொல்லப்படும் சோமவன்ச அமரசிங்கவும், தேசிய மீட்பு முன்னணி மற்றும் ஆரிய புள்ளேகொடவின் சிறிலங்கா முற்போக்கு முன்னணி என்பவற்றின் ஆதரவுடன் ஜனாதிபதி தேர்தல் களத்தில் குதிக்கும் வாய்ப்பும் இருக்கின்றது. இதேவேளை சோமவன்ச அமரசிங்கவின் போக்கை எதிர்க்கும் ஜே.வி. பியின் லண்டன் குழு ஜே வி பி யின் முன்னாள் தலைவரும் அரச படைகளால் கொல்லப்பட்டவருமான றோகண விஜேவீராவின்மைத்துனரான டாக்டர் சந்திரா பெர்னாண்டோவை களத்தில் குதிக்க வைக்க திட்டம் போட்டுள்ளது.

இவர்களைத் தவிர சிறுபான்மை இன மக்களின் முழு ஆதரவும் திருமதி சந்திரிகா குமாரதுங்காவுக்கு கிடைத்து விடாமல் இருப்பதை உறுதிப்படுத்தும் பொருட்டு தமிழ் அமைப்பொன்றின் தலைவரையும் ஜனாதிபதி வேட்பாளராக்குவதற்கான முயற்சியில் ஐ.தே.க. திரைமறைவில் ஈடுபட்டிருப்பதாகக் கூறப்படுகிறது. அத்துடன் பொதுத் தேர்தலில் கிடைத்த சாட்டையடியிலிருந்து மீளவும், பெரும்பான்மையினரின் இனவெறிக்குத் தீனி போடவும் மக்கள் ஐக்கிய முன்னணியின் தலைவர் தினேஷ் குணவர்த்தனாவும் நாட்டைக் காப்பதற்காக ஜனாதிபதி பதவியைத் தம்மிடம் ஒப்படைக்கும்படி வாக்காளர்களைக் கோரக் கூடும்.

எது எப்படி இருந்தபோதும் ஜனாதிபதி ஆட்சிமுறையையொழிப்பதற்காகவும் பிரேமதாசா அரசுக்கு எதிராகவும் சுமார் இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் ஒரே மேடையில் தோன்றிப் பிரசாரம் செய்த காமினி திசாநாயக்காவும், திருமதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்காவும் ஜனாதிபதி தேர்தல் களத்தில் நேருக்கு நேர் மோதிக் கொள்ளப் போவது மட்டும் இப்போது தெளிவாகின்றது.

சகலதுறை வணிகர்களுக்கும்,
ஊழியர்களுக்கும், பொதுமக்களுக்கும்
யாழ். வணிகர் கழகம் விடுக்கும்

## முக்கிய அறிவித்தல்

இந்தியப்படை நம் தமிழ்இன மக்களுக்கு இழைத்த கொடுமைகளைத் தாங்காது துயர்கொண்டு எம் மக்களுக்காக, எம் மண்ணுக்காக ஐந்து அம்சக் கோரிக்கைகளைமுன்வைத்து 15-09-87 தொடக்கம் 26-09-87 வரை நல்லூர் கந்தசுவாமி கோவில் வீதியிலே உண்ணாவிரதமிருந்து ஈகைச்சாவு அடைந்த தியாகி லெப். கேணல் திலீபனின் 7-ம் ஆண்டை நினைவு கூரும் முகமாக நாளை 17-09-94 சனிக்கிழமை சகலதுறை வணிகர்களும், ஊழியர்களும், பொதுமக்களும் தங்கள் வணிக நிலையங்களை முழுமையாகப் பூட்டி அன்றையதினம் நல்லூர் கந்தசுவாமி கோவில் முன்றலில் காலை 7.30 மணிக்கு நடைபெறவிருக்கும் உண்ணாவிரதம், மற்றும் நிகழ்வுகளிலும் தவறாது கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

பொதுச்செயலாளர்
யாழ். வணிகர் கழகம்

[சி-10347]

வட இலங்கை சுதேச வைத்திய சபை

## பொதுக்கூட்டம்

காலம் : 25-09-1994 காலை 9-30 மணி

இடம் : லங்கா சித்த ஆயுர்வேதக் கல்லூரி, யாழ்ப்பாணம்.

விடயம் : 1. கடந்த ஆண்டு கணக்கு அறிக்கை சமர்ப்பித்தல்.
2. புதிய நிர்வாக சபையினைத் தேர்ந்தெடுத்தல்.

சித்த ஆயுர்வேத வைத்தியர்களும், கல்லூரியுடன் தொடர்புடையவர்களும் அன்புடன் அழைக்கப்படுகின்றனர்.

கௌரவ செயலாளர்.

(9414)

31-ம் நாள் நினைவஞ்சலியும்

## அந்தியேட்டி அழைப்பும்



### அமரர் கந்தர் மயில்வாகனம்

தோற்றம் 10 - 08 - 1917
மறைவு 17 - 08 - 1994

எங்கள் நலம் காத்து-குலம் காத்த செல்வமே
நீங்கள் நிலம்விட்டு நீள்பயணம் சென்றதேனோ
முத்துடல் சாய்ந்து மூபத்துடன் ஒரு நாள் - நாம்
கத்தி - கதறி காலமாய் போனதே
எங்களின் செல்வமே எங்கையா போனீர்
கண்களில் சொரியுதே கவலையால் கண்ணீர்
இருந்தவர் நீர் இன்றில்லை உம் நினைவுகள் தான் உண்டு
இறைஞ்சுகிறோம் இறைவனையே ஏற்க உம்மை;
''அன்னாரின் ஆத்மா சாந்தி அடைய பிரார்த்திப்போமாக''

ஓம் சாந்தி, சாந்தி, சாந்தி!


இன்று (16-09-1994) வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் அன்னாரது ஆத்ம சாந்திக் கிரியைகளிலும், உபசாரத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அன்புக் குடும்பத்தினர்

சுதுமலை வடக்கு,
மானிப்பாய்.

(9411)

வெலிங்டன் சந்திக்கருகில்!



UNIKCO
COMPUTER CENTRE

புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன

வார நாள் வகுப்புகள் - 16-09-94 (இன்று பி.ப. 3 மணி)
வார இறுதி வகுப்புகள் - 17-09-94 (நாளை காலை 10 மணி)

குறிப்பு: குறித்த அளவு மாணவர்கட்கு மட்டுமே அனுமதி உண்டு.
மேலதிக விபரங்கட்கு:

37, CLOCK TOWER ROAD,
JAFFNA.

(சி-10345)

# ஜனாதிபதி தேர்தலில் இ. தொ. கா. சந்திரிகாவையே ஆதரிக்கும் ?

(கொழும்பு)

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், பொது ஜன ஐக்கிய முன்னணி வேட்பாளரையே ஆதரிக்கலாம் என கொழும்பு பத்திரிகை ஒன்று தெரிவித்துள்ளது.

''தோட்டத் தொழிலாளர்களின் பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதற்கு அரசாங்கம் பலமுள்ளதாக இருக்க வேண்டும் கடந்த பொதுத் தேர்தலின் போது ஐ. தே, க. மலையகத்தில் வெற்றி பெற்றதற்கு இ. தொ. காதான் காரணமாகும் நுவரெலியா மாவட்டத்தில் இரண்டு லட்சம் சிங்கள வாக்காளர்களும் ஒரு லட்சத்து எண்பத்தையாயிரம் தோட்டத் தொழிலாளர்களும் உள்ளனர் இ. தொ கா. உறுப்பினர்கள் மூவர் எழுபத்தையாயிரத்திற்கும் மேற்பட்ட பெரும்பான்மை வாக்குகளுடன் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்எங்களுடைய வாக்குகள் உறுதியானவை'' என கடந்த வாரம் தொண்டமான் ஹட்டனில் தெரிவித்திருப்பதையும் அப்பத்திரிகை சுட்டிக்காட்டியுள்ளது.

## லண்டனில் லக்கி அல்கம சிகிச்சைக்கு சென்றாராம்

(கொழும்பு)

இராணுவ தலைமை அதிகாரி மேஜர் ஜெனரல் லக்கி அல்கம கடந்த வாரம் பிரிட்டனுக்கு பயணமானார்.

மருத்துவ சிகிச்சைக் காக செல்லும் இவர் இரு வாரங்களுக்கு அங்கு தங்கியிருப்பார்.

இதேவேளை பொதுத்தேர்தல் சமயத்தில், சதிமுயற்சி ஒன்றுக்கு திட்டமிட்டது தொடர்பாக லக்கி அல்கமவும் மற்றும் ஆறு அதிகாரிகளும் விசாரணை நடத்துமாறு ஜனாதிபதியை கேட்டுக் கொண்டதற்கிணங்க, சி. ஐ. டியினர் ஜனாதிபதியின் பணிப்புக்கிணங்க சதி தொடர்பான விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## அறிவியல் வினாடி வினா

ஜூலை 5, கரும்புலிகள் நாளை முன்னிட்டு விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பினால் பாடசாலை மாணவர்களுக்கிடையே நடத்தப்படும் ''அறிவியல் வினாடி வினா'' போட்டித் தொடர்-2 பருத்தித்துறை கோட்டத்தில் நாளை சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு பருத்தித்துறை மெதடிஸ்த உயர்தர பெண்கள் கல்லூரியில் நடைபெறவுள்ளது இப் போட்டித் தொடர் தமிழீழ வானொலியில் ஒவ்வொரு சனிக்கிழமையும் மாலை 5 30 மணிக்கு ஒலிபரப்பப்படும்.

## பொருண்மிய கண்காட்சி மேலும் ஒருவாரம் நீடிப்பு

(யாழ்ப்பாணம்)

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினரின் நல்லூர்க் கண்காட்சி மேலும் ஒருவாரம்நீடிக்கப்பட்டு, வரும் 23ஆம் திகதி வரை நடைபெறும் என தெரிவிக்கப்படுகிறது.

மேலும் நாளை முதல் கண்காட்சியைப் பார்க்க விரும்பும் பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், அதிபர்கள் தாவடியில் அமைந்துள்ள த. பொ. மே. நிறுவனத்தின் முதன்மைச் செயலகத்துடன் தொடர்பு கொண்டு காலை 10 மணியில் இருந்து பிற்பகல் ஒரு மணி வரைக்குமான காலப்பகுதியில் பார்ப்பதற்கான நேரத்தைப் பெற்றுக்கொள்ள முடியும் என மேலும் தெரிவிக்கப்படுகிறது.

பாடசாலை மாணவர்களிற்கு மிகவும் பயனுள்ள இக் கண்காட்சியை பெருமளவு மக்கள் பார்வையிட்டு வருவதனால் மேலும் காலத்தை நீடித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (88. நி)

## தியாகி திலீபன் நினைவாக உண்ணாவிரத நிகழ்வுகள்

(யாழ்ப்பாணம்)

தியாகி லெப். கேணல் திலீபனின் 7-ம் ஆண்டு நினைவின், 2-ம் நாள் நிகழ்வுகள் இன்று யாழ். குடாநாடெங்கும் நடைபெறவுள்ளன.

உண்ணாவிரத நிகழ்வுகளில் வலிகாமம் கோட்டத்தில், உடுவில் வட்டத்தில் சுன்னாகம் சிவன் கோவிலடியில், அளவெட்டி மல்லாகம் வர்த்தகர் சங்கம் தையற் பயிற்சி நிலையம், கோணப்புல முகாம், நீதிமன்ற முகாம் என்பனவும், சங்கானை வட்டத்தில் வடக்கம்பரை அம்மன் கோவிலடியில், மூளாய் சிற்றூர் மக்களும், சண்டிலிப்பாய் வட்டத்தில் ஆனைக்கோட்டை மூத்த விநாயகர் கோவிலடியில தெல்லிப்பளை ப. நோ கூ. சங்கமும், கோப்பாய் வட்டத்தில் நீர்வேலி கந்தசாமி கோவில் முன்றலில் உரும்பிராய் ஆர். சி. பாடசாலை, சந்திரோதையா பாடசாலை. கோப்பாய் வடக்கு சீ சீ. தமிழ்க் கலவன் பாடசாலை, ஆர் சி. பாடசாலை, அச்செழு தெ ப. பொ, உ. சங்கம், உரும்பிராய் மாதர் சங்கம், உரும்பிராய் ச.ச. நிலையங்களும், யாழ்/ நல்லூர் வட்டத்தில் நல்லூர் கந்தசுவாமி கோவிலடியில். யாழ்ப்பாண, நல்லூர் பிரதேச செயலக பிரிவைச் சார்ந்த சகல அரசாங்க திணைக்கள ஊழியர்களும், யாழ்ப்பாண அரசாங்க செயலக ஊழியர்களும். திருவள்ளுவர் சனசமூக நிலைய மக்கள், வள்ளுவர் சனசமூக நிலைய மக்கள், மாவீரர் சனசமூக நிலைய மக்களும் கலந்துகொள்வர்.

வடமராட்சி கோட்டத்தில் பருத்தித்துறை, மந்திகை அம்மன் கோவிலடியில் புலோலி வணிகர் சங்கமும், கரவெட்டி வட்டத்தில் துன்னாலை கலிகைக்கந்தன் ஆலயத்தில் நெல்லியடி ப.நோ கூ. சங்கமும், உடுப்பிட்டி வட்டத்தில், உடுப்பிட்டிச் சந்தி நாவலடி வைரவர் கோவிலடியில் கலைவாணி ச ச: நிலையம், பொன் கந்தையா ச.ச. நிலையம், நாவலர் ச ச. நிலையம் விநாயகர் படிப்பகம், உடுப்பிட்டி அ மி. கல்லூரி (ஆண்கள்) என்பனவும் கலந்துகொள்ளும்.

தென்மராட்சிக் கோட்டத்தில்கைதடிவட்டத்தில்கைதடி சந்தியில்கைதடிகல்லாகம் மக்கள், நாவற்குழி கலைவாணி ச.ச. நிலையம் என்பனவும், சாவகச்சேரி வட்டத்தில் மணங்குணாப் பிள்ளையார் கோவிலடியில் மீசாலை சாவகச்சேரி தெ ப.பொ. சங்கமும், கொடிகாமம் வட்டத்தில் 190-ம் கட்டை புகையிரத நிலையத்திற்கு அருகாமையில் திலீபன் நகர், வேழாபள்ளம் ச ச. நிலையம், வடக்கு மிருசுவில் மாவீரர் ச.ச. நிலையம், வர்த்தகர் சங்கம் என்பனவும், பளை வட்டத்தில் இரட்டைக்கேணி அம்மன் கோவிலடியில் இந்திரபுரம் மக்கள், முகமாலை மக்கள், உதவி அரசாங்க பணிமனை என்பனவும் பங்குபெறும்.

தீவக கோட்டத்தில், அரியாலை நாச்சிமார் கோவிலடியில் காரைநகர் ப.நோ கூ. சங்கம், வேலணை மேற்கு நடராஜா வித்தியாலயம், மண்டைதீவு மத்திய மகா வித்தியாலயம், நாரந்தனை சிறி கணேசா வித்தியாலயம், லவனிதா குடியிருப்பு என்பன கலந்துகொள்ளும்.

கடற்புலிகளின் பிரதேசங்களில் மணற்காட்டிலும், தாழையடியிலும் உண்ணாவிரத நிகழ்வுகள் இடம்பெறும்.

## புத்தக கண்காட்சி

(பருத்தித்துறை)

சுவாமி விவேகானந்தரின் சிகாகோ நிகழ்வையொட்டி பருத்தித்துறை ஸ்ரீராம கிருஷ்ணசாரதா சேவாச்சிரமத்தால் நடாத்தப்படவுள்ள 12-வது ஸ்ரீ ராமகிருஷ்ண விவேகானந்த புத்தகக் கண்காட்சி இன்று பிற்பகல் 2 மணிக்கு பருத்தித்துறை வட-இந்து மகளிர் கல்லூரியில் ஆரம்பமாகின்றது. (25)

## ''அணைந்த தீபத்தின்'' 4ஆம்ஆண்டு நினைவலைகளோடு



யாழ். கோட்டை முற்றுகையின் போது வீரச்சாவை தழுவிக்கொண்ட

### வீரவேங்கை சுபாசினி

[சின்னக்கண்டு சரஸ்வதி]

| | |
|---|---|
| தாயின் மடியில் மழலையாய் | தாயகத்தின் விதையாய் |
| 20-04-1973 | 16-09-1990 |

பொங்கு புகழ் செந்தமிழ்த் தலைவன் வழியில் புலியாகி!!
தரம் கெட்ட சிங்களப் படைதன்னை துரத்திட
யாழ். கோட்டையில் களமாடி
தாயகப் பற்றினால் தன்னுயிர் துறக்க குண்டினைப்
பரிசாய் நெஞ்சில் ஏற்றாய்!

சுபாசினி! நீயோ முழுமதியாய் வான் வெளியில்
இனி எப்போ மலர்வாய் தாய் மண்ணில்!!!

இமையாணன்,
உடுப்பிட்டி.
16-09-1994

-குடும்பத்தினர்

(9418)

## புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

### 1994-9-16 வெள்ளி இரவு

08.01 - தியாகதீபம் லெப்டினன்ட் கேணல் திலீபனின் 7-ம்ஆண்டு நினைவாக சிறப்பு நிகழ்ச்சி ''பசிப்போரில் பன்னிருநாட்கள்''
08.25 - சணப்பொழுது- ''கப்டன் தமயந்தி''
08.30 - செய்திகள்
08.40 - அரசியல் அரங்கம் - ''கண்ணுக்குள் நெய்விட்டு கருத்துடன் இருக்க வேண்டிய காலகட்டம்''
08.50 - வாத்தியகானங்கள்.

### 1994-9-17 சனி காலை

07.02 - மாவீரவணக்கம்
07.15 - நீங்கள் கேட்டவை
07.30 - செய்திகள்
07.35 - பத்திரிகைச் செய்திகள்
07.40 - தியாகதீபம் லெப்ரினன்ட் கேணல் திலீபனின் 7-ம் ஆண்டு நினைவாக சிறப்பு நிகழ்ச்சி ''தியாகதீபம் திலீபன்''


சங்கானை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வரையுள்ளது)

## கிளைக்குழுத் தேர்தல் - 1994 (கிளைக் குழுக்கள் இல்லாத கிளைகளுக்கு மட்டும்)

கிளைக்குழுக்கள் இல்லாத கிளைகளின் விபரம்:

| கிளை இல: | கிளையின் பெயர் |
|---|---|
| 10 | பொன்னாலை |
| 12 | தொல்புரம் |
| 23 | அராலி வடக்கு |

நியமனப் பத்திரம் ஏற்றுக்கொள்ளும் திகதி:-
1 - 10 - 1994 சனிக்கிழமை
நேரம்:- முற்பகல் 9. 00 மணி தொடக்கம் முற்பகல் 10. 00 மணி வரை.
நியமிப்புப் பத்திரம் ஏற்றுக் கொள்ளுமிடம் :- அவ்வக் கிளை விற்பனை நிலையங்கள்.
அபேட்சகர் நியமனங்களில் ஆட்சேபனைகள் எதுவும் இருப்பின் அன்றைய தினம் முற்பகல் 10. 00 மணி தொடக்கம் முற்பகல் 11 00 மணிக்கிடையில் தேர்தல்/ உதவித் தேர்தல் உத்தியோகத்தரிடம் எழுத்துமூலமாக ஒப்படைத்தல் வேண்டும்.

தேர்தல் இருப்பின், தேர்தலும் வாக்களிப்பும்:
தேர்தல் திகதி: 8 - 10 - 1994 சனிக்கிழமை
நேரம்:- முற்பகல் 9. 00 மணி தொடக்கம் பிற்பகல் 4. 00 மணி வரை.
இடம்:- அவ்வக்கிளை விற்பனை நிலையங்கள்
குறிப்பு:- நியமனப் பத்திரங்களை 15 - 9 - 1994 தொடக்கம் அவ்வக் கிளை நிலையங்களிலும், தலைமைக் காரியாலயத்திலும் பணத்தைச் செலுத்திப்பெற்றுக் கொள்ளலாம்.

மு க. மாசிலாமணி
தேர்தல் உத்தியோகத்தர்.

பிரதேச செயலகம்,
வலி மேற்கு, சங்கானை.
13 - 09 - 1994.

(சி-10346)

யாழ்ப்பாணம்

# சமஷ்டி ஆட்சிமுறையை ஏற்படுத்த பிரதமருக்கு சகலரும் உதவவேண்டும்

## முன்னாள் அமைச்சர் கோரிக்கை

(கொழும்பு)

சமஷ்டி ஆட்சிமுறை மூலம் இனப்பிரச்சினைக்கு தீர்வு காண சகலரும் பிரதமருக்கு உதவவேண்டும் என முன்னாள் தகவல்துறை இராஜாங்க அமைச்சர் ஏ.ஜே. ரணசிங்க தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில், இந்த நாட்டுக்கு சமஷ்டி முறையே சிறந்தது என நான் அடிக்கடி கூறிவந்துள்ளேன். வடக்கு-கிழக்குப் பிரச்சினையை இலகுவாக தீர்த்து வைப்பதற்கான நிலைமைகள் முன்னர் இருந்தன, ஆனால் தேர்தல்கள் மூலம் அரசியல் இலாபங்களை கருத்தில் கொண்டு ஆட்சியிலும் அதிகாரத்திலும் பேராசைகொண்டு, போலியான தேசிய உணர்வுகளை உருவாக்கிய ஐ. தே. கவும் சுதந்திரக்கட்சியும் இவ்வளவு காலமும் நடந்துகொண்ட கீழ்த்தரமான முடிவு காரணமாக இன்று எமது நாடு அழிவிற்கு இட்டுச்செல்லப் பட்டுள்ளது.

சிறுபான்மை இனத்தவர்களுக்கு வழங்கப்படவேண்டிய உரிமைகளை வழங்கவேண்டும். அவற்றை சுதந்திரமாக அனுபவிப்பதற்கு அவர்களுக்கு சுதந்திரத்தையும் வழங்கவேண்டும். இதனை ஏற்படுத்தும் முகமாக முயற்சி எடுத்துவரும் தலைமைத்துவத்திற்கு நாம் அனைவரும் ஒத்துழைப்பு வழங்கவேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# இனப்பிரச்சினை தீர்வு முயற்சிகளை ஆதரிப்பேன்

## றொனி டி மெல் அறிவிப்பு

(கொழும்பு)

இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்காக அரசாங்கம் எடுத்து வரும் நடவடிக்கைகளை ஆதரிக்கப் போவதாக முன்னாள் நிதியமைச்சரான றொனிடி மெல் தெரிவித்துள்ளார்.

இனப்பிரச்சினைக்கான தீர்வு காணப்படும் இடத்து, இப்போது செலவினமாக உள்ள கோடிக்கணக்கான ரூபாய்களில் அனைத்து மக்களுக்கும் மூன்று வேளை இலவசமாக உணவை வழங்க முடியும். அநியாயமாக. யுத்தத்தில் இறந்து போகும் ஆயிரக் கணக்கான மனிதவுயிர்களைக் காப்பாற்ற முடியும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# மேலும் ஒரு தொகுதி மண்ணெய் வரும்

(யாழ்ப்பாணம்)

மாகோ கப்பல் இன்னும் ஒரு தொகுதி மண்ணெண்ணெயை திரும்பவும் குடா நாட்டிற்கு ஏற்றிவரவுள்ளது.

இம்முறை மாகோ கப்பல 8 ஆயிரம் பெரல்கள் மண்ணெண்ணெயை குடா நாட்டிற்கு ஏற்றி வருகிறது. இதை இறக்கி முடித்ததும் உடன் கொழும்பு சென்று இன்னுமொரு தொகுதி மண்ணெண்ணெயை ஏற்றிவரவுள்ளது.

யாழ், குடாநாட்டில் தற்பொழுதுமண்ணெண்ணெயை தாராளமாக கிடைக்க வழி செய்யும் முகமாக இந்நடவடிக்கையை மேற்கொண்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

[88, நி[

### பேச்சுக்களில்

ணுவ நிலைகளுக்கு சென்றபோது இராணுவத்தினர் மத்தியில் பேசுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார் தமது இந்த விஜயத்தின் நோக்கம் அமைதியை நிலைநாட்ட அரசாங்கம் எடுக்கும் நடவடிக்கைகள் குறித்து ஆயுதப்படையினருக்கு எடுத்துரைப்பதாகும் எனவும் தெரிவித்துள்ளார்.

இனப்பிரச்சினையை தீர்க்கும் விடயத்தில் முன்னைய அரசாங்கம் கடைப்பிடித்த கொள்கைகளை புதிய அரசாங்கம் ஒருபோதும் பின்பற்றாது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஆயுதப்படையினர் எதிர் நோக்கும் பிரச்சினைகளுக்கு விரைவில் தீர்வுகாணப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்,

### கப்பல்

நாட்டிற்கு அனுப்பிவைக்கப் படும் பொருட்களிற்கான கப்பல் கட்டணத்தை அரசு பொறுப்பேற்கவேண்டும் என்றும் அல்லது அதற்கான மானியத்தைத் தந்துதவுமாறும் மேலும் கேட்கப்பட்டுள்ளது. (88) (நி)

### கொழும்பு

கொடுக்கிறாய் என்ற துவேஷ வாசகங்கள் காணப்படுகின்றன.

தற்போதைய ஆளும் கட்சிக்கு எதிராக சிங்கள மொழியில் ஐ. தே. கட்சியினரால இச்சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளதாக மேலும் தெரிவிக்கப்படுகிறது. [யோ]

### பிரதி

இதேவேளை தேர்தல் நடைபெற்ற பின்னர் பதுளை மாவட்டத்தில் நடைபெற்ற ஐவரின் கொலைக்கும் இவருக்கும் தொடர்பு இருப்பதாக ஐ. தே. க. வட்டாரங்கள் தெரிவித்துள்ளன,

# எழுதுவினைஞர் நியமனம்

(யாழ்ப்பாணம்)

யாழ். வலயம் - 1 கல்வித் திணைக்களத்தில் தேசிய தொழில் பயிலுனர் சபையினால் பயிற்றப்பட்ட சுமார் 10 எழுதுவினைஞர்கள் தற்காலிகமாக நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கான நியமனம் நேற்று யாழ். கல்வித் திணைக்களத்தில் வைத்து வழங்கப் பட்டுள்ளது. இவர்களின் சேவைக்காலம் சுமார் ஆறு மாதங்கள் என தெரிவிக்கப் பட்டது.

அத்துடன் இவர்கள் வலயம் -1 கல்வித் திணைக்களத்திலும், கோட்டங்களிலும் சேவையாற்றவுள்ளனர் என தெரியவருகின்றது. (பா)

### அரசின்

இதன்போது இராணுவ உயர் அதிகாரிகள் முதல் சிப்பாய்கள் வரை கேள்விகளையும் சந்தேகங்களையும் எழுப்பியதாக ]எல்மோ. பர்னாண்டோ தெரிவித்தார்.

அப்போது பேச்சுவார்த்தை குறித்து இராணுவத்தினர் மத்தியில் தொடர்ந்து நம்பிக்கையீனம் நிலவுவதை காணமுடிந்தது என அவர் மேலும் குறிப்பிட்டார்.

### தியாகி

விரதப்பந்தல்கள் பல அமைக்கப்பட்டுள்ளன. இவற்றில் உண்ணாவிரதங்கள், ஈகச் சுடரேற்றல், மலரஞ்சலி, நினைவுரைகள், கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

தியாகி திலீபனின் ஏழாம் ஆண்டு நினைவு நாட்களில் ஆரம்ப நாளான நேற்று சகல இடங்களிலும் மிக உணர்வெழுச்சியுடன் திலீபனின் தியாகம் நினைவு கூரப்பட்டு விமர்சையாக அனுஷ்டிக்கப் பட்டது. (தி)

### பெண்பிள்ளை

யில் தம்மை முற்றாக அர்ப்பணித்து வருகின்றனர். எமது மக்கள் எல்லோரும் தம்மால் முடிந்த சகல பங்களிப்புகளையும் எமது போராட்டத்திற்கு நல்கிவருகின்றனர்.

இச் சூழ்நிலையில் ஒரு சில பொறுப்பற்ற நபர்கள் மட்டும் சந்திகள், மக்கள் கூடும் இடங்களில் நின்றுகொண்டு விஷமத்தனமான முறையில் பெண் பிள்ளைகளுடன பகிடி சேஷ்டைகள் விடுவது, அவர்களின் பின்னால் சென்று மனம் புண்படும்படியான வார்த்தைகள் - வசனங்கள் பிரயோகிப்பதுமான வெறுப்புமிக்க செயல்களில் ஈடுபட்டு வருகின்றனர் இது மிகவும் மனவேதனையைத் தரும் செயலாகும். இவர்களது இவ்வாறான செயல்களினால், இப்பெண்பிள்ளைகளின் பெற்றோர்கள் எவ்வளவு வேதனையும், துன்பமும் அடைவார்கள் என்பதை எண்ணிப் பார்க்கவேண்டும். நாம் எல்லோரும் நற்பண்புடைய மக்கள். எம் எல்லோர்க்கும் சகோதர சகோதரிகள் உள்ளனர் என்பதை இவர்கள் எண்ணிப் பார்க்க வேண்டும்.

எமது போராட்டமானது ஒழுக்கமானகட்டுப்பாடுடைய நல்லதோர் சமுதாய அமைப்பை கட்டியமைப்பதற்காகவே. எனவே இக் காலகட்டத்தில் இவ்வாறான மன வேதனை தரக்கூடிய செயல்களை விட்டெறிந்து நற்பண்புகள் நிறைந்த நல்ல மனிதர்களாக நீங்கள் வளர வேண்டும். அண்மைக் காலங்களில் அநேகமான பெண் பிள்ளைகளும், அவர்களது பெற்றோர்களும் எமது காவல் பணிமனைக்குச் சென்று முறையிட்டு வருகின்றார்கள். எனவே இவ்வாறு மன வேதனை தரும் முறையில் பெண் பிள்ளைகளுடன் பகிடிகள், சேஷ்டைகள விடுபவர்கள் மீது காவல்துறையினர் ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பர் என்பதை அறியத் தருகின்றேன் என குறிப்பிடப்பட்டுள்ளது.

# பனைமரம் தறித்தவரிடம் குற்றப்பணம் அறவீடு

அனுமதியின்றி பனை மரம் தறித்தவரிடம் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் குற்றப்பணம் அறவிட்டதோடு அவர்கள் தறித்த பனை மரங்களையும் பறிமுதல் செய்தது

வலிகாமம ஈவினை பகுதியில் ஒருவர் தனது வளவில் உள்ள 32 பனைமரங்களை உரும்பிராயில் உள்ள ஒருவருக்கு விற்றுள்ளார். அவர் பனைமரம் தறிப்பதற்கான அனுமதிப்பத்திரமின்றி தறித்ததனால் அவரிடமிருந்து பனை ஒன்றிற்கு 1000/- ரூபா வீதம் குற்றப்பணம் அறவிடப்பட்டதுடன் பனை மரங்களும் பறிமுதல் செய்யப்பட்ட சம்பவம் ஒன்று அண்மையில் இடம்பெற்றது.

தமிழீழத்தின் இயற்கை வளமான பனை மரங்கள் கண்டபடி தறிக்கப்படுவதை கட்டுப்படுத்தும் முகமாக தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுனைத்தின் மூலம் அனுமதி எடுக்கப்படல் வேண்டும் எனவும் அவ்வாறு அனுமதியின்றி தறிக்கப்படும் மரங்கள் ஒவ்வொன்றுக்கும் 1000/- ரூபா வீதம் அபராதம் விதிக்கப்படும் எனவும் ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்தது இங்கு குறிப்பிடத்தக்கது.

# சேதமடைந்த பாடசாலைகள் விபரம் அனுப்பி வைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் சிறிலங்கா படைகளினால் மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கை மற்றும் விமானக் குண்டு வீச்சுக்களினால் சேதமடைந்த பாடசாலைகளின் சேத விபரங்கள் பற்றி யாழ். கல்வி வலயங்கள் கல்வியமைச்சிற்கு விபரமான அறிக்கையினை அனுப்பிவைத்துள்ளன.

புதிய கல்வியமைச்சர் மேற்படி பாதிக்கப்பட்ட பாடசாலைகளுக்கு ஏற்பட்டுள்ள சேதவிபரங்களையும் அவற்றைப் புனரமைப்பதற்காக தேவைப்படும் நிதியின் அளவையும் விபரமாக அனுப்பி வைக்கும்படி யாழ் மாவட்ட வலயங்களின் கல்விப் பணிப்பாளர்களைக் கேட்டுக்கொண்டிருந்தார்,

இதன் படியே யாழ் கல்வி வலயங்கள் விபரமாக கல்வியமைச்சிற்கு அறிவித்துள்ளதாக தெரிய வருகின்றது.

எனினும் சிறிலங்கா இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளின் பாடசாலைகளின் சேத விபரங்கள் சில நடைமுறைச் சிக்கல்களினால் சரிவர மேற்கொள்ளப்படவில்லை எனவும் தெரிய வருகின்றது.

அத்துடன் இடம்பெயர்ந்து வேறு இடங்களில் இயங்கும் பாடசாலைகள் பல்வேறு நெருக்கடிகளின் மத்தியில் ஓலையினால் வேயப்பட்ட நிலத்திற்கு சீமெந்து போடப்படாத கொட்டகைகளில் இயங்கி வருகின்றன. [பா]

# மரண அறிவித்தல்கள்

## திருமதி ஆசைப்பிள்ளை இளையதம்பி

காங்கேசன்துறை மாம்பிராய் வீதியைச் சேர்ந்தவரும், மல்லாகம் கோட்டைக்காட்டில் இடம்பெயர்ந்து வசித்தவருமாகிய திருமதி இ. ஆசைப்பிள்ளை அவர்கள் (15-09-94) நேற்று காலமானார். இவர் இளையதம்பியின் அன்பு மனைவியும், ஆனந்தன் (உப-அதிபர், ஸ்கந்தவரோதயாக் கல்லூரி, சுன்னாகம்), செல்வராஜா (இளைப்பாறிய அதிபர்), கருணாநிதி (மக்கள் வங்கி, மன்னார்) ஆகியோரின் அன்புத் தாயாரும், மீனாம்பிகை, சிவதேவி, பவளராணி (சீமெந்துக் கூட்டுத்தாபனம், காங்கேசன்துறை) ஆகியோரின் அன்பு மாமியாருமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் மல்லாகம் கோட்டைக்காடு இல்லத்தில் இன்று (16-09-94) வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மல்லாகம் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

தகவல்:

மல்லாகம்.
(9421)

இ. ஆனந்தன்
(மகன்)

## திருமதி சந்திரசேகரம் பார்பதிஅம்மா

திருமதி சந்திரசேகரம் பார்பதிஅம்மா 15-09-94 காலை அகாலமரணமானார். அன்னார் திரு. சந்திரசேகரத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற கிருஷ்ணமூர்த்தி (மாவீரர் மேஜர் மூர்த்தி மாஸ்ரர்), ஞானபண்டிதன் (பிரான்ஸ்), சிவன்பாதகுமார் (பிரான்ஸ்), தவராசா கமலாம்பிகை. நந்தகுமார் பாலாம்பிகை (பிரான்ஸ்), யோகாம்பிகை (ஆசிரியை), நடராஜா விமலாம்பிகை (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற கிருஸ்ணசாமி, வடிவேலு (ரிசிகேசம்), கந்தசாமி (ஆசிரியர்), டாக்டர் சண்முகராசா ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார். இறுதிக் கிரியைகள் 16-09-94 இன்று வெள்ளிக்கிழமை காலை 10-00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக ஊரணி பொலிகண்டி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

குருநாதர் கோயில் வீதி,
பொலிகண்டி.
(9417)

தகவல்:
சி. தவராசா
(மருமகன்)

யாழ். ஸ்ரீதரில் இன்று முதல்
தினசரி காலை 10.30,
மாலை 4.00, 6.00 மணி.

தாயகக் கனவு

(சி/10349)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31-ம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1994-ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 16-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது